ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர் :—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 7.] நள௵ தை௴ [ஸஞ்சிகை 4.

𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑌕𑌮𑌨𑌂 𑌤𑌮𑌾𑌲𑌵𑌰𑍍𑌣𑌂 𑌰𑌵𑌿𑌕𑌰𑌗𑍌𑌰𑌵𑌰𑌾𑌮𑍍𑌬𑌰𑌂
𑌦𑌧𑌾𑌨𑍇 - 𑌵𑌪𑍁𑌰𑌲𑌕𑌕𑍁𑌲𑌾𑌵𑍃𑌤𑌾𑌨𑌨𑌾𑌬𑍍𑌜𑌂 𑌵𑌿𑌜𑌯𑌸𑌖𑍇
𑌰𑌤𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 𑌮𑍇𑌽𑌨𑌵𑌦𑍍𑌯𑌾 ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புகள்.

லோகாந்தரம்.

ஸர் ஆலிவர் லாட்ஜ் எனும் பதார்த்த ஶாஸ்த்ர வித்வான் மரணாநந்தரம் ஜீவன் நிலைத்திருக்கின்றான் என்ற விஶ்வாஸத்தை த்ருடமாகக் கொண்டவர் எனும் விஷயத்தைப் பலதரம் வெளியிட்டோம். பல விதமாகப் பராமர்சித்து, அந்த உண்மையை அவர் அங்கீகரித்தனர் என்பதையும் காட்டியிருக்கின்றனம். ஸமீப காலத்திற்குள் அவருடைய தநயன் யுத்தத்தில் இறந்தான். அவன் இறந்த பிறகும் அவன் அநுவர்த்தித்து இருந்ததைத் தம்முடைய அநுபவத்தால் ஸர் ஆலிவர் லாட்ஜ் தெரிந்துகொண்டனர் என்று சில நாட்களுக்கு முன்பு ஹிந்து பத்ரிகையில் வெளியிட்டிருந்தது. பாஶ்சாத்ய வித்யா நிஷ்டர்கள் மரணாநந்தரம் ஜீவாநுவ்ருத்தியைத் தெரிந்துகொள்ளும் ப்ரகாரம் ஏகரூபமானது. சில மநுஷ்யர் இறந்தார்க்கும் இறவாதார்க்கும் மத்யே மத்யஸ்தர் (Medium)

எனப்படுகின்றார்கள். நமது பாஷையில் அவர்களை 'த்வாரம்' என்றும் சொல்லலாம். ஆங்கிலேய பாஷையில் மீடியம் (Medium) எனும் சப்தத்திற்கு வ்யாக்யாநமாக, "எவனுடைய மூலமாக அசரீரிகள் பேசுகின்றனவோ வ்யாபரிக்கின்றனவோ அவன்" என்று சொல்லப்படுகின்றது. இப்படி த்வாரமாகின்றவர் ப்ராயேண பெண்பாலர். ம்ருதரான சேதநர்கள் த்வாரபூதருடைய சரீரங்களையும் இந்த்ரியங்களையும் சித்தங்களையும் அவர்க்குப் பராதீநங்களாகச் செய்து, தாம் அவற்றை ஸ்வாதீநப்படுத்திக்கொண்டு அந்தச் சரீராதிகள் மூலமாகப் பேசுகின்றார்கள்; கார்யமும் செய்கின்றார்கள். இதில் மோசமில்லையென்று நிர்ணயிப்பதற்காக இவ்வண்ணம் விமர்சை செய்பவர்கள், த்வாரபூதர்க்குத் தெரியாதனவும், ம்ருதமானவர்க்கும் தமக்கும் ஏகதேசத்தில் தெரிந்தனவுமான அநுபவங்கள் த்வாரபூதர் மூலமாக வெளியாவதைக் கண்டுகொள்கின்றார்கள். ஸர் ஆலிவர் லாட்ஜ் என்பவர், தமக்கும், தம்முடைய இறந்துபோன புத்ரனுக்கும் மாத்ரம் தெரிந்த விஷயங்களை, அவற்றை யறியாத த்வாரம் மூலமாக வெளியாகக் கண்டனராம். அதாவது, த்வாரத்தின் மூலமாகத் தமது மகன் தம்முடன் பேசி, தனது இருப்பைத் தெரிவித்தானென்கின்றார்.

* * * * * * *

இது இப்படி நிற்க, ஶரீர வியோகாநந்தரம் ஜீவன் இருக்கின்றானென்பது தான் விசாரித்தறிந்த உண்மையென்று, ஸர் ஆர்தர் கோனன் டாயல் (Sir Arthur Conan Doyle) என்றொரு ஆங்கிலேயர் உரைப்பதாக 1916ஆம் நவம்பர் மாஸம் 29-ம் தேதி ஹிந்து பத்ரிகையில் வெளிப்படுத்தி யிருக்கின்றது. அவ்வுண்மைக்கு ஸாக்ஷிகளாக க்ரூக்ஸ், (Crookes), வாலஸ் (Wallace), ப்ளம்மாரியன் (Flammarion), லாட்ஜ் (Lodge), பாரட் (Barret), ஜனரல் ட்ரேஸன் (General Drayson), ஜனரல் டர்நர் (General Turner), ஸார்ஜண்ட் பாலன்டைன் (Sergeant Ballantyne), ஸ்டெட் (W. T. Stead), எட்மாண்ட்ஸ் எனும் ஜட்ஜ் (Judge Edmondes), வைஸ் அட்மிரல் ஆஸ்போர்ன்-மூர் (Vice Admiral Osborne-Moore), கானன் வில்பர் போர்ஸ் (Canon Wilber force) இவர்களையும் இன்னும் பல வித்வாங்களையும் குறிப்பிடுகின்றார். இவர்கள் விசாரித்துத் தீர்மாநித்த விஷயத்தைப்பற்றி

இன்னும் ஸாக்ஷ்யம் தேடவேண்டா மென்றும், அதை மறுக்கின்ற வர்கள் மரணாநந்தரம் ஆத்மாநுவ்ருத்தியில்லை யென்று ஸித்தாந் தப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றுரென்றும் ஜெ. ஆர்தர் ஹில் (J. Arthur Hill) என்பவர் அபிப்ராயப்படுகின்றனராம்; அதைத் தீர்மானமாக ஒப்புக்கொண்டு மதத்தைப்பற்றிய நூதந ஏற்பாடு களைச் செய்ய வேண்டுமென்றும் அபிப்ராயப்படுகின்றனராம்.

* * * * * * *

ஸர் ஆர்தர் கோனன்டாயில் அதன்மேல் நிச்சயிப்பது என் னென்ருல்: "நம்மைக் காட்டிலும் உத்க்ருஷ்ட சேதநர் உளர். அவர் களை ஏஞ்ஜல்கள் (Angels) என்று சொல்லலாம். அவர்கள் தர தம பாவத்தால் பல வகுப்புகளாய்ப் பிரிந்து மேன்மேலும் உயர் கின்றனர். அவர்களுடைய ஆதிக்யம் நமக்கு த்ருஷ்டி கோசர மன்று; நம்முடைய சித்தத்துக்கும் எட்டாதது. இவர்களுக்கெல் லாம் மேல்பட்டவனாக ஸர்வஶக்தி விஶிஷ்டனான ஈஶ்வரன் ஒரு வன் உளன். பரலோகம் ஒன்று உண்டு. எல்லா ஜீவன்களும் முடி வில் அதை அடைய வேண்டுமானாலும், யாவரும் அதை அடை வர் என்று நிச்சயமில்லை", என்று இந்த ப்ரகாரமாக ஏற்படு கின்றது.

* * * * * * *

ஐரோப்யர் ஸ்வாநுபவங்களைக் கொண்டு நிஶ்சயிக்கக் கூடிய விஷயம், மரணாநந்தரம் ஜீவன் இருக்கின்றான் என்பது ஒன்றே. மற்றதெல்லாம் பல மதங்களின் தத்வங்களை யோசித்து அவர் ஊஹிக்கின்ற விஷயங்கள். மதமென்பது ஸ்வாநுபவத்தாலோ, ஶாஸ்த்ர மெனப்பட்ட ஆப்தவாக்யங்களில் விஶ்வாஸத்தாலோ, த்ருடமாக நம்பப்பட்ட உண்மைகளுடன் கூடியிருக்கத்தக்கது. கேவலம் யுக்திகளால் மதமொன்று ஏற்படத்தக்கதன்று. பேதிக் கும் பல மதங்களின் நம்பிக்கைகளைக் குறித்து ஸம்பாவிதாம்ஶத் தை யுக்திகளால் நிர்ணயிக்கப் பொருந்தும்.

* * * * * *

மேலெழுதிய வண்ணம் ஏற்பட்ட ஜீவாநுவ்ருத்தியைப்பற்றிய நிர்ணயத்தைக் குறித்தும், அந்நிர்ணயத்தை ஆஶ்ரயித்து உதிக் கின்ற ஊஹங்களைப்பற்றியும் சிறிது விசாரிக்கப் பொருந்தும். த்வா ரம் (Medium) ஒன்று ஏற்படாவிட்டால் இறந்தவர் நம்முடன்

ஸம்பாஷிக்கவாவது, நாமறிய ஒரு கார்யம் செய்யவாவது அமைய மாட்டாது. நாம் கரண களேபரங்களைக்கொண்டு நம் எண்ணங்களை வெளியிடுகின்றோம்; பாஹ்ய விஷய ஜ்ஞாநங்களை ஸம்பாதிக்கின்றோம்; அவற்றிற் கேற்றபடிச் செயல் புரிகின்றோம். அவ்வண்ணமே சரீரமிழந்த சேதநர்களும் தமது எண்ணங்களை நமக்கு அறிவிக்க வேண்டியிருக்கின்றது; தமது செயல்களை நமக்குக் காட்ட வேண்டி யிருக்கின்றது. அவர்களுக்கு நமக்குப்போல் ஸ்தூல சரீரங்கள் இல்லை; இந்த்ரியாதிகளும் இல்லை. அந்தரிந்த்ரியங்களான புத்தி, மநஸ், அஹங்காரம் இவை நடைபெறுவதற்கு உபாதிகளாக ஏற்பட்டிருக்கிற மூளை, ஹ்ருதயம் முதலானவைகளும் இறந்த சேதநர்க்கு இல்லை போலும்! ஆதலால் ஜீவிப்பவர்களுக்குள் ஒருவருடைய சரீரத்தையும் அதைச் சார்ந்த மூளை ஹ்ருதயம் இந்த்ரியங்கள் இவற்றையும் இறந்தவர் வசப்படுத்திக்கொள்ளவேண்டும். அப்படி வசப்படுத்துகையில் அந்தச் சரீராதிகளைத் தனதென்று அபிமானித்த சேதநன் அச்சரீரத்தில் எங்கோ உள்ளடங்கிப்போக வேண்டும்.

* * * * * *

டிஸம்பர் மாஸம் 23-ம் தேதி ஹிந்து பத்ரிகையில் ஸர் ஆலிவர் லாட்ஜ் உரைப்பதாக வெளிப்படுத்தி யிருந்தபடி, மூளையைத் துன்பப்படுத்தினுல் அஹம் ப்ரத்யயம் நிவர்த்திக்கின்றது. அதைச் சீர்படுத்த அஹம் ப்ரத்யயம் மறுபடி ப்ரகாசிக்கின்றது. ஒருவன் தான் நினைத்தவண்ணம் கரணங்களை உபயோகப்படுத்தி ஓர் செயல் புரிந்தால் தான், அவனுடைய அஹம் ப்ரத்யயம் பரர்க்கு ப்ரகாசிப்பதாகச் சொல்லலாம். கரணங்கள் இல்லாவிட்டாலும், கெட்டுப்போனுலும், அவற்றிற்குரிய ப்ரவ்ருத்திகள் இல்லை; அந்த ப்ரவ்ருத்திகளால் அநுமிக்கக்கூடிய அஹம் ப்ரத்யயத்தின் ப்ரகாசமும் இல்லை. அந்தரிந்த்ரியங்கட்கும் பாஹ்யேந்த்ரியங்கட்கும் ஸம்பந்தம் அற்றதாகில், புத்தி மநஸ்ஸுக்களின் ப்ரவ்ருத்திகள் ஒருவகையாலும் அநுமிக்கக்கூடியவை அல்ல. மூளை கெட்டால் மேல்சொன்ன ஸம்பந்தம் அற்றுப்போம்.

* * * * * *

இந்த யோசனைகளை அநுஸரித்து நாம் சொல்லக்கூடிய விஷயம் உண்டு. அஹங்காரம், மநஸ், புத்தி யெனப்பட்ட அந்தரிந்த்

ரியங்களுடைய ஒவ்வொரு வ்யாபாரத்துக்கும் ஏற்றபடி மூளையின் ஸ்தாந விசேஷங்களில் சலநங்கள் உண்டென்பார்கள். அச்சலநங்களையே மேற்படி வ்யாபாரங்கட்குக் காரணங்களாகச் சொல்வாருமுளர். வ்யாபாரங்களால் சலநங்கள் உத்பந்நமாகின்றன எனவும் பொருந்தும்.

பாஹ்யேந்த்ரியங்கள் மூலமாக விஷய ஜ்ஞாநங்கள் உதிக்கும்போது மூளையில் சலநங்கள் தற்செயலாய் உதிக்கவேண்டும். ஆனால் விஷய ஜ்ஞாநங்களை 'நான்' என்று எண்ணும் சேதநன் ஸாக்ஷாத்கரிக்கின்றான். கண்களுக்கும், காணப்படும் வஸ்துக்களுக்கும் ஸம்யோகம் உண்டாகி, விஷய ப்ரதீதிக்கு அநுகுணமானதோர் சலநம் மூளையில் உதிக்கும். பல ப்ரத்யயங்களினுடைய பகுத்தறிவு சேதநனை ஆச்ரயித்தது. அவனுடைய விமர்சைகளுக்கும் அத்யவஸாயங்களுக்கும் ஸஹகாரிகளாக மூளை பாகங்களில் விகாரங்கள் உண்டான போதிலும், அவற்றை அவனுடைய விவேசநாதிகளுக்குக் காரணங்களெனத் தகாது.

ஆதலால் சரீரேந்த்ரியங்கட்கு உடையவனான சேதநன் யாதேனுமோர் ஹேதுவால் அவற்றினுடைய ஸ்வாதீநத்தை இழக்கலாம். மூளைக்குத் தீங்கு வந்தாலும் அது நேரிடலாம். ஒரு இந்த்ரியம் கெட்டால் அதனுடைய உடைமை சேதநனுக்கு அற்றுப்போம். அவனைக் காட்டிலும் பலிஷ்டனான மற்றொரு சேதநன், அவனை உள்ளடக்கி, அவன் சரீரேந்த்ரியங்களைத் தன் வசமாக்கிக்கொண்டு தானெண்ணியபடி அவற்றை உபயோகப்படுத்தக்கூடும். சரீரமில்லாத ஒரு சேதநனுடைய ப்ரவ்ருத்திகளுக்குச் சரீரவானான மற்றொருவனுடைய கரணகளேபரங்கள் இவ்வண்ணம் அநுகூலமாகப் பொருந்தும்.

புத்திபலம் உடையவர் மேல் விவரித்த வண்ணம் அடங்கிப்போகமாட்டார்கள். அஃது அற்றவர் ப்ராயேண பெண்பாலர். புத்தி பலமுடைய பெண்களும் உளர். அது இல்லாத ஆண்மக்களும் உண்டு. ஒரு கார்யத்தை உத்தேசித்துப் பாரவச்யதையை இச்சையால் பொருந்துபவரும் உண்டு. த்வாரமாகப்பட்டவர்கள் இவ்வகுப்புகளில் ஒன்றில் சேர்ந்தவர்.

பிசாசுகள் என்று சொல்லப்பட்ட சில க்ஷுத்ர ஜீவன்கள் புத்தி பலமற்ற சேதநர்களை ஆவேசித்துப் பேசவும் செயல்புரிய

வும் கண்டவர்களும் கேட்டவர்களும் இருக்கின்றார்கள். ஶூந்யம் முதலான அபிசார ப்ரயோகங்களால் சிலர் பரருடைய சரீரங்களின்மேல் க்ஷுத்ர ஜீவன்களை ஏவுகின்றார்கள் எனவும் ப்ரஸித்தியுண்டு. இந்த விஷயங்களில் நம்பிக்கையற்றவர்கள், மேல் குறித்த வண்ணம் தூஷிதங்களான சரீராதிகளை யுடையவர்களுக்கு (Hysteria) எனப்பட்ட ஒரு வ்யாதி விஶேஷத்தைக் கல்பிக்கின்றனர்.

க்ஷுத்ரங்களால் ஆவேசித சித்தர்கள், என்றும் பேசாத பாஷைகளைப் பேசுவதும், என்றும் அறியாத விஷயங்களைச் சொல்வதும், சில அதி மாநுஷ சேஷ்டிதங்களைச் செய்வதும் உண்டென்று ப்ரஸித்தி யிருக்கின்றது. இவ்வநுபவங்களைப் பற்றி நன்றாக விமர்சித்து நம்பிக்கை கொள்ளல் வேண்டும். ஐரோப்ய வித்வாங்கள் ப்ரஸ்தாபிக்கும் அநுபவங்களும் விமர்சார்ஹங்களே. வ்யாதியால், தெரியாத பாஷைகளையும் அறியாத விஷயங்களையும் ஒருவரும் வெளிப்படுத்தமாட்டார்கள்.

* * * * * *

ஆதலால் பதார்த்த ஶாஸ்த்ரம் அறிந்தவர்களுடைய அநுபவங்களால் ஏற்பட்டபடி ம்ருதமான ஜீவன்கள் அந்யசேதநர்களை ஆவேஶித்துக் கார்யங்களைச் செய்கின்றனராகில், அதே ரீதியான அநுபவங்களை ஸாதாரண ஜநங்கள் கண்டு நம்புவதைப்பற்றிப் பரிஹஸித்தல் யுக்தமன்று. இந்நம்பிக்கைகளும் அங்கீகரிக்கத்தக்கனவென்று ஸர் ஆலிவர் லாட்ஜ் ஒப்புக்கொள்கின்றார். பழைய விஶ்வாஸங்கட்குப் புதியதோர் பெயர் வைத்துச் சொல்வதனால் பழைய விஶ்வாஸங்கள் பரிஹாஸார்ஹங்களன்று. அவை Superstition எனப்பட்ட அகாரண விஶ்வாஸங்களாகமாட்டா. மோசக்காரர்கள் ஸாதாரண ஜநங்களைப் பலவிதமாக வஞ்சிப்பார்களென்பதை யாம் ஒப்புக்கொள்கின்றோம். மோசம் செய்ய வேண்டுமென்று ப்ரயத்நப்படுபவர்கள் கற்றோர்களையும் காலங்களில் பாதிக்கக் கூடும்.

* * * * * *

இறந்தவர்கள் இருப்பையும் கதியையும்பற்றி மதாந்தரங்களில் யோசனையில்லை. அந்த யோசனைகள் ஆர்யமத க்ரந்தங்களில் காணப்படுகின்றன. அவற்றை ஆர்யர் ப்ரமாணமாகக் கொள்கின்

றார்கள். அந்யர் அவற்றை வேடிக்கையாக நினைத்துப் பரிஹஸிப்பதும் ப்ரலபிப்பதும் உண்டு.

* * * * * *

மநுஷ்யரைக் காட்டிலும் உத்க்ருஷ்டரான சேதநர் உண்டென்று ஐரோப்யர் இப்போது யோசிக்கின்றனர். அவர்கள் மதம் அவ்வகைப்பட்ட சேதநர்களை இருவகுப்பாகப் பிரிக்கின்றது. ஒரு வகுப்பினர் ஏஞ்ஜல்கள்; மற்றொரு வகுப்பினர் பிசாசுகள். இருவகுப்பினரும் நித்யர்கள். ஏஞ்ஜல்களுக்கு அதிபதி, காட் (God) என்று சொல்லப்பட்ட ஈச்வரன். பிசாசுகளுக்குத் தலைவன் சாத்தன். இவ்விரு வகுப்பினரும் நித்யவிரோதிகள். ஏஞ்ஜல்களுக் குரிய தொழில் ஈசனுக்காகத் தூதத்தொழில் புரிதல்; பிசாசுகளுடன் யுத்தம் செய்தல்; ஈசன் சிங்காதநத்தின்முன் நின்றுகொண்டு பாடுதல். பிசாசுகள் செய்யும் தொழில் ஈசன் செய்வதை யெல்லாம் சீரழித்தல். இப்படிப்பட்ட நித்ய சேதநர் வகுப்புகளில் ஒன்றின்மேல் ஒன்று உயரும்படியான அந்தஸ்துகள் சொல்லப்படவில்லை.

* * * * * *

நம்முடைய மதம் தத்வங்களை மூன்று விதமாகப் பாகிக்கின்றது. "க்ஷரம் ப்ரதாநம் அம்ருதாக்ஷரம் ஹர: க்ஷராத்மாநாவீஶதே தேவ ஏக:" "[illegible]" என்று இவ்விதமாக பஹுப்ராமணங்களால் ப்ரக்ருதி, புருஷன், ஈச்வரன் என்று மூன்று தத்வங்கள் ஸித்திக்கின்றன. புருஷன் எனும் சேதநன் மூன்று பிரிவுடையவன். ஸம்ஸாரத்தை நித்யமாகக் கடந்தவர்கள் நித்யர். இவர்களைக் கிறிஸ்தவர்கள் ஏஞ்ஜல்களென்பார்கள். ஸம்ஸாரத்தில் இருந்து பின் அதைக் கடந்தவர்கள் முக்தர். ஸம்ஸாரத்திற்குள் அகப்பட்டவர்கள் பத்தசேதநர்கள். பத்தர்களுக்குள் பல வகுப்புகள் உண்டு. மநுஷ்யர்க்குத் தாழ்ந்த ஜீவன்கள் பலவகைப்பட்டவை. மநுஷ்யர்க்குள்ளும ஜந்மத்தாலும், ஜந்மாந்தர ஸம்ஸ்காரங்களாலும், ஸம்ஸர்க்கங்களாலும் உண்டாகப்பட்ட ஸத்வாதி குணங்களின் தாரதம்யத்தால் வர்ணபேதங்

கள் ஸம்பாவிதங்களானபோதிலும், மநுஷ்யத்வேந அவர்களுக்குள் ஒரு ஸமாநாகாரம் உண்டு.

* * * * * * *

தைத்திரீயோபநிஷத்தில், ஆநந்தவிசாரணவஸரத்தில், மநுஷ்யர்க்கு உத்க்ருஷ்டர் மநுஷ்யகந்தர்வர் என்றும், அவர்க்கும் மேல்பட்டவர் தேவகந்தர்வர் என்றும், அவர்களைக் காட்டிலும் ஆநந்தாநுபவத்தில் அதிக்ரமித்தவர் சிரகாலவாஸம் செய்யத்தக்க லோகத்தை யடைந்த பித்ருக்கள் என்றும், அவர்களிலும் மேல்பட்டவர்கள் புண்யகர்ம விசேஷங்களால் தேவலோகத்தை அடைந்தவர்கள் என்றும், அவர்களிலும் அதிஶயித்தவர்கள் வைதிக கர்மங்கள் செய்து இந்த்ராதி தேவதைகளுடைய ஸாயுஜ்யம் பெற்றவர்கள் என்றும், அவர்களைக்காட்டிலும் அதிஶயித்த ஆநந்தாநுபவம்செய்பவர்கள் வஸுருத்ராதித்யர்களெனப்பட்ட ஹவிர்பாகாதிகாரிகளான முப்பத்துமூன்று தேவர்கள் என்றும், அவர்களுக்கும் ஆநந்தாநுபவத்தால் ஶ்ரேஷ்டன் இந்த்ரன் என்றும், இந்த்ரனுக்கும் ஆசார்யனான ப்ருஹஸ்பதி இந்த்ரனில் மிக்கவர் என்றும், அவரைக்காட்டிலும் ஸர்வலோக ஸ்வாமியான சதுர்முகன் விசேஷித்தவர் என்றும், நிரதிஶயாநந்தாநுபவம் ப்ரஹ்மாதிகளால் உபாஸிக்கப்பட்ட ஸர்வேஶ்வரனுடையது என்றும் வ்யவஸ்தை பண்ணப்பட்டிருக்கிறது. மநுஷ்ய கந்தர்வர் என்றால், மநுஷ்யத்வம் போகாமலே கர்மவிசேஷங்களாலும் வித்யா விஶேஷங்களாலும் கந்தர்வத்வ மடைந்தவர்கள்; அவர்களுக்கு அந்தர்தாநாதி ஶக்தியுண்டு; ஸூக்ஷ்ம கார்யங்களை ஸாதிக்கத்தக்க இந்த்ரிய விசேஷங்களுண்டு; அவர்கள் த்வந்த்வங்களை ஜயிக்கவல்லவர்கள்; இஷ்டங்களை ஸாதித்துக்கொள்பவர்கள்; அவர்களுக்குச் சித்தப்ரஸாதம் உண்டு; ஸுகவிசேஷங்களுமுண்டு. தேவகந்தர்வர்கள் பிறப்பாலே கந்தர்வர்கள்; மேல்சொன்னவருடைய விசேஷ ஶக்திகளை ஸ்வபாவமாகவே அடைந்தவர்கள்.

இப்படிப் படிப்படியாக உயர்கின்ற சேதந வர்க்கங்களுடைய ஆநந்தாநுபவம் யாவும், இன்னும் ப்ரஹ்மத்தினுடைய நிரதிஶயித ஆநந்தமும், ஶ்ரோத்ரியனும் ப்ரஹ்மநிஷ்டனும் காமங்களால் ஜயிக்கப்படாத மநஸ்ஸுடன் கூடினவனுமான க்ருதக்ருத்யனுக்கு உண்டென்றும் சொல்லப்படுகின்றது. அதனால் மநுஷ்யர்க்கு

மேற்பட்டு உத்க்ருஷ்டங்களான பல ஜந்மங்களை யடையாமலே, ஒவ்வொரு புருஷனும் ப்ரஹ்ம ப்ராப்தியை இந்த லோகத்தில் நின்றே ஸம்பாதிக்கக்கூடுமென்று காட்டப்பட்டது.

ப்ரகரணாந்தரத்தில் (ப்ரஹதாரண்யகோபநிஷத்தில்) “அய மாத்மா இதம் சரீரம் நிஹத்ய அவித்யாம் கமயித்வா அந்யந் நவதரம் கல்யாணதரம் ரூபம் குருதே பித்ர்யம் வா காந்தர்வம் வா தைவம் வா ப்ராஜாபத்யம் வா ப்ராஹ்மம் வா அந்யேஷாம் வா பூதாநாம் ॥” (ப்ராணோத்க்ரமணமான பிறகு) இந்த ஜீவாத்மாவானவன் இந்தச் சரீரத்தை நாசம்செய்து, அதாவது, அதில் முன்னிருந்த சைதந்ய பாவத்தைப்போக்கி, அதைக் காட்டிலும் அழகானதோர் புதிய ரூபத்தைக் கர்மாநுகுணமாகத் தனக்கு உண்டுபண்ணிக் கொள்கின்றான்; அதாவது, பித்ருலோக வாஸயோக்யமான ரூபமோ, கந்தர்வரூபமோ, தேவலோக வாஸ யோக்யமான ரூபமோ, ப்ரஜாபதிலோகவாஸ யோக்யமான ரூபமோ, ப்ரஹ்மலோக வாஸ யோக்யமான ரூபமோ, வேறு ப்ராணிகளுடையதானதோர் சரீரமோ (அடைகின்றான்)” என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

இப்படிப்பட்ட சரீர விசேஷங்கட்குப் பொருந்திய ஸுக்ருத மற்றவர்கள் ஸாதாரண மநுஷ்யர்களாகவோ, இன்னும் கீழ்ப்பட்ட ஜந்துக்களாகவோ புநர்ஜந்மத்தை அடைவார்கள் என்பது உபநிஷத்துக்களால் ஏற்படுகின்றது.

சேதநனுடைய ஜ்ஞாந சக்தியானது ஸர்வத்ர ஸமாநமாயிருந்தும், சேதநன் ஜந்மமெடுக்கின்ற சரீரங்களுக்கு அநுகுணமாக அதனுடைய ப்ரகாசமானது ஸங்கோச விகாஸங்களை யடைகின்றதென்பதை, “ஜ்யோதிஷ்மந்தோ ஹ்ருஷீகாண்யவசேஷாத்ர தேஹிநாம்”, என்று ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ விஷ்ணுபுராண ச்லோகங்களைத் தமிழ் படுத்தித் தத்வவிசாரத்தில் காட்டியிருக்கின்றோம்.

* * * * * * *

ஜீவகோடிகளுக்கு லோகாந்தரத்தை ஒப்புக்கொள்கின்றவர்கள், அவர்களுக்கு ஜ்ஞாந விகாஸத்தாலும் ஆநந்தாநுபவத்தாலும்

பேதிக்கப்பட்ட பல சரீரங்களை யடையத்தக்கப் பல லோகப்ராப்தியையும் அங்கீகரிப்பது யுக்தம். இந்த யோசனையை மதாந்தரங்கள் செய்யவில்லை. ஆர்யமதத்தால் ஏற்பட்ட லோகாந்தரக்ரமம் யுக்திவாதங்கட்கும் பொருந்தி நிற்கின்றது. இப்படிப்பட்ட லோகங்களை ஜீவன் ஸ்வகர்மத்தால் ஆர்ஜிக்கத்தக்கவன் என்பதும் யுக்தியுக்தம். ஒவ்வொருவன் கர்மாநுகுணமாகக் கர்மாத்யக்ஷன் ஸங்கல்பத்தால் மாத்ரமே ஒவ்வொருவனுக்கும் லோகாந்தர வாஸவ்யவஸ்தை ஏற்படுகின்றது. கர்மாவஸாநத்தில், (அதாவது, ஒவ்வொருவனும் ஸ்வகர்ம பலத்தை யநுபவித்த பிறகு) லோகாந்தரங்களினின்று, "க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விசந்தி", என்கிறபடியே, இந்தக் கர்மபூமியில் ஜந்மமெடுக்கின்றானென்பதும் யுக்தமே. ஆதலால், இந்த லோகத்தில் மநுஷ்யர்க்குள் காணப்படுகின்ற ஸுகதுக்க தாரதம்யங்களும், அவ்வவனுடைய கர்மத்தைப் பொறுத்ததென்பது அங்கீகரிக்கத்தக்க விஷயம். ஐரோப்பியர் நூதநமாகக் கண்டுபிடிக்கின்ற உண்மைகள் ஆர்யமதத்தின் உண்மைகளை ஸ்திரப்படுத்துகின்றன. ஸநாதநமான வைதிக மதம், நம் பூர்வீகர்களான மஹர்ஷிகளால் ஸ்தாபிக்கப்பட்டது. ஸ்வலாப ஸந்துஷ்டரும், ஸாதுக்களும், சாந்தமநஸ்கரும், ஸர்வபூதங்களுக்கும் ஹிதத்தைச் செய்பவருமான விப்ரச்ரேஷ்டர்களால் இதுவரையில் ரக்ஷிக்கப்பட்டது. இப்போது அம்மஹாத்மாக்களுடைய வம்சத்தில் ஜநித்து, விஷயாஸக்தசித்தர்களாய் நின்று, தமக்குப் பரமச்ரேயஸ் இன்னதென்று அறியத் திறனற்றுப் போனவர்கள், துஸ்ஸங்கங்களில் விழுந்து, துர்வாஸனைகளால் ஆகர்ஷிக்கப்பட்டுப்போய், வைதிக மததூஷகர்களாகவும் பரிணமிக்கின்றனர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

# ஆறுவது வர்ஷத்திய

# ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கம்.

“ ஶோபாஶ்லேஷ பரிக்லிஷ்ட பராவரேஶம்
யஜ்ஞாத் யாகாத் பரம் தபஸ: பரஸ்தாத் ।
தஸ்ய ஸிம்ஹாஸந ஸம்ஸ்தாபித்ய தாவதீதம்
மோசயந்தி யச்சரித கல்பக ஶ்ருதாஸ்தாம் । ”

இவ்வர்ஷத்திய ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கம், சென்ற மார்கழி மீ 13, 14, 15 - ம் தேதிகளில் ஸ்ரீ ஆதிகேசவனுடைய திருவடி வாரத்தில் ஸதஸ்ஸை உத்தேசித்து எழுந்தருளி யிருந்த ஸகல பாகவதர்களுடைய திருவுள்ளமும் உகக்கும்படி நடைபெற்றதென்பது ப்ராயேண எல்லாருக்கும் தெரிந்திருக்கும். 13 - ம் தேதி புதன் கிழமை பூர்வாஹ்ணம் முதலாக 16 - ம் தேதி சனிக்கிழமை ராத்ரி வரையிலுள்ள நாலு தினங்களிலும், ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகன் மண்டபமும் ஸ்ரீ கேசவப் பெருமாள் ஸந்நிதி வீதியும் பெரியதொரு மஹோத்ஸவத்தினால் பெறக்கூடிய அஸாதாரண சோபையைப் பெற்றிருந்தன. ஸித்தாந்தத்தின் ஸம்ருத்தியைக் குறைவறப் புகழ்ந்து பேச உசிதமான அவகாசம் லப்தமானது பற்றி மிக்க ஆநந்தத்தை அடைந்துள்ள பல வைதிக வித்வான்களும், அந்தப் புகழ்ச்சியைச் செவி குளிரக் கேட்டு ஸந்தோஷிப்பதில் மஹத்தான ஔத்ஸுக்யம் கொண்டு பற்பல விடங்களிலிருந்து வந்திருந்த கணக்கற்ற லௌகிக ஆஸ்திகர்களும், இவர்களெல்லாருக்கும் கைங்கர்யம் செய்வதையே பரமபாக்யமாக உணர்ந்திருந்த இந்த ஸ்தலவாஸிகளான சிறுவர்களும், தம் தம் வர்ணாச்ரம தர்மங்களுக்குரிய மனோ பாவங்களினாலும் அவைகளுக்கு அநு

குணங்களான நடையுடைகளினுலும் இந்த ப்ரதேசம் முழுவதை யும் ப்ரகாசிப்பித்து வந்ததை அங்கு வந்திருந்த எல்லாரும் பார்த் திருக்கலாம். இம்மாதிரியான ப்ரவ்ருத்திகளில் அதிகமான அபிநி வேசம் கொள்ளாமலிருக்கும் சில உதாஸீநர்கள்கூட இந்த உத் ஸாஹத்தையும் இதன் ஸாதுத்வத்தையும் பார்த்து மிக்க ஆச்சர்ய மடையும் படியும், இயற்கையாக காமக்ரோதாதிகளில் நோக்கும் மநோபாவனைகளை அவைகளுக்குப் பரிசிதங்களான வ்யாபாரங் களிலிருந்து சற்று விலக்கி ஸாத்விகத் தன்மையை மேல்கொள்ளும் படியும், அவ்வளவு மஹிமை பொருந்தினதாக இந்த ஸங்கம் நடைபெற்ற தென்றே சொல்லவேண்டும். பகவான் இம்மாதிரி இந்தக் கைங்கர்யத்தைப் பூர்த்தி செய்துகொண்டது பற்றி நாமெல் லாரும் அவன் விஷயத்தில் அளவற்ற க்ருதஜ்ஞதை யுள்ளவர்க ளாகவே இருக்கிறோம்.

ஆனல், இந்தப் பரிச்ரமத்தின் லாபாம்சமென்ன? என்று ஒரு சங்கை ஜநிக்கலாம். 'தாத்காலிகமான ஒரு ஆநந்தத்தை இது ஜநிப்பிக்கின்றதே தவிர சாச்வதமான எவ்வித பலமும் இதனல் ஏற்பட்டதாகத் தென்படவில்லை' என்று சிலர் ஆக்ஷேபிப்பதை நாம் கேட்டிருக்கிறோம். அவர்களுக்கு நாம் சொல்லும் ப்ரத்யுத் தரம் ஒன்றே. நமது ஆசார்யர்களால் லோகோஜ்ஜீவநார்த்தமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஸித்தாந்தத்தின் ப்ரசாரமாகிற நமது முக் கியமான உத்தேச்யத்தை, இம்மாதிரியான ஸங்கங்கள் ஸாக்ஷாத் தாக ஸாதித்துக் கொடுக்க யோக்யதை யற்றனவாயினும், அத ற்கு இவை பரம்பரையாக உபகாரங்களாகின்றன வென்றே நாம் நினைக்கிறோம். மூன்று தினங்களில் பல பெயர்களாற் பல ப்ரகார மாகச் செய்யப்படும் உபந்யாஸங்களும் சர்ச்சைகளும் ஸித்தாந்தா நபிஜ்ஞர்களுக்கு ஸித்தாந்தத்தைப் போதிப்பித்து விடுமென்ரு வது, ஆத்ம குணங்கள் இல்லாதவர்களுக்கு அந்தக் குணங்களை உத்பத்தி செய்துவிடு மென்ருவது நாம் வாதிக்கவில்லை. ஆனல், மிதஜ்ஞர்களான ஸாமாந்ய ஜநங்கள், வயதினுலும் ஜ்ஞாநத்தினு லும் பெரியோர்களாயுள்ள மஹான்கள் நமது ஸித்தாந்தத்தைப் பற்றி புகழ்ந்து பேசுவதையும், அதிலுள்ள மாஹாத்ம்யத்தைக் கொண்டாடுவதையும் பார்த்தால், அவர்களின் அநுஷ்டாநமடியாக நமது ஸித்தாந்தத்தில் ஒரு விச்வாஸத்தைப் பாராட்டி அதைத் தெரிந்து கொள்வதில் ஒருவித ருசியைக் கொள்வார்கள் என்பதில்

ஸந்தேஹமில்லை. பாஷாந்தரத்தில் ஒருவிதத் தேர்ச்சியை யடைந்து அதனல் உயர்ந்த லௌகிக பதவியைப் பெற்றிருக்கும் சில நாஸ்திகர்களுடைய ஸமாகமத்தை அடைந்திருக்கும் நமது சிறுவர்கள், அந்த நாஸ்திகர்களையே ப்ரமாணமாகக்கொண்டு அவர்களின் ஆசாரத்தையே அநுவர்த்தித்து ஆத்ம நாசத்தை விளைவித்துக்கொள்ளுகிறார்க ளென்பதை நாம் ப்ரதி தினமும் பார்க்கவில்லையா?

“யத்யதாசரதி ச்ரேஷ்ட ஸ்தத்ததேவேதரோ ஜநா: ।
ஸ யத்ப்ரமாணம் குருதே லோகஸ்தததநுவர்த்ததே ॥”

அப்படிப் பாஷாந்தராப்யாஸம் செய்து லௌகிகத்தில் மேன்மை பெற்றவர்களுக்குள், நாஸ்திக்யத்தை அவலம்பியாமல் சாஸ்த்ர வச்யர்களா யிருப்பவர்களும் சிலருண்டு என்பதை எவ்விதத்திலாவது இந்த ஸாமாந்ய ஜநங்களுக்குக் கோசரமாகும்படி நாம் செய்தால், தீங்கு அவ்வளவாக விளையாது என்பது யுக்திக்கும் அநுபவத்திற்கும் ஒத்திருக்கின்றது அந்த விதத்தில் இம்மாதிரியான ஸங்கங்கள் உபகாரகங்களாகின்றன என்பது நமது நம்பிக்கை. தவிரவும், சில ஸுக்ருத விசேஷ மடியாகச் சிற்சில பாகவதர்களின் கடாக்ஷம் பிறந்தவுடன், நமது புத்திக்கு ஒருவிதமான ஸந்மார்க்க ப்ரவ்ருத்தி ஏற்படுவதும் உண்டு. அநேக பாகவதர்களும் வைதிக பண்டிதர்களும் ஒன்று சேரும் இம்மாதிரியான ஸங்கங்களில் அப்படிப்பட்ட கடாக்ஷம் சில சேதநர்களுக்கு நேராதென்றும் ஸந்மார்க்கப்ரவ்ருத்தி உண்டாகாது என்றும் யாராற் சொல்லக்கூடும்? ப்ரத்யுத, இரண்டொரு வ்யக்தி விசேஷங்களில் அம்மாதிரியான அநுக்ரஹம் ப்ரக்ருதத்தில் நேர்ந்திருப்பதை நாம் ஸாக்ஷாத்தாகப் பார்க்கிறோம். இப்படி நமது சாஸ்த்ரத்தில் ஒரு வித ருசியை ஜநிப்பிப்பதிலும், உபசித புண்யர்களாயுள்ள சில வ்யக்திகளுக்கு ஸந்மார்க்க ப்ரவ்ருத்தியை ஸாதித்துக் கொடுப்பதிலும் இம்மாதிரியான ப்ரயத்நம் உபகாரகமாயிருந்தால் அதை நிஷ்பல மென்றாவது அல்ப பலமென்றாவது உதாஸிப்பது எப்படி உசிதமாகும்? இந்த ப்ரவ்ருத்தியில் பூர்ணமான விச்வாஸமுள்ள நாம், மேன்மேல் இது வ்ருத்தியாக வேண்டு மென்றும், இப்பொழுது இதில் கொஞ்சம் ஔதாஸீந்யத்தை வஹிக்கும் சில ஆஸ்திகர்களும் இனி

இதில் சேர்ந்து இதற்கு உசிதமான ஸஹாயத்தைச் செய்யவேண்டு மென்றும் ஹார்த்தமாக ப்ரார்த்திக்கிறோம்.

இவ்வர்ஷத்திய ஸதஸ், இதற்கு முந்தின வர்ஷங்களில் நடை பெற்ற ஸதஸ்ஸுகளிலிருந்து இரண்டொரு அம்சங்களில் கொஞ்சம் நூதநமான ஒரு பரிபாடியை அநுஸரித்திருந்தது. அந்த அம்சங்களைப் பற்றி மாத்திரம் இவ்விடத்தில் ப்ரஸ்தாவிப்பது அவஸர ப்ராப்தமாக இருப்பதால் அது ஸம்பத்தமான இரண்டொரு விஜ்ஞாபநங்களைச் செய்துகொள்ள யத்நிக்கின்றோம். முதலாவது, ப்ராசீந காலங்களில் வாக்யார்த்த மென்று சாஸ்த்ர ஸம்பத்தமான ஒரு வித விஷயசர்ச்சை வித்வான்களுக்குள் நடைபெற்று வந்தது என்று பலர் கேட்டிருக்கலாம். அவ்விதமான சர்ச்சை, ஸ்ரீ வேதாந்த சாஸ்த்ரம் ஸம்பந்தப்பட்ட வரையிலாவது இவ்வர்ஷத்தில் இந்த ஸதஸ்ஸில் நடக்கவேண்டுமென்று சிலருக்கு ஆஸ்தை யிருந்தபடியால், அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மூன்று திநங்களிலும் பூர்வாஹ்ணத்தில் அவ்வித சர்ச்சை நடைபெற்றது. ஸ்ரீ. உ.வெ. சேட்லூர் நரஸிம்மாசார்யர், புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர், இஞ்ஜிமேடு ரங்கநாதாசார்யர், ஸ்ரீ சைலம் தாதாசார்யர், வாங்கல் ஸ்ரீநிவாஸாசார்யர் இன்னும் அநேக வித்வான்கள் அதில் அந்வயித்தார்கள். கேவலம் ஸம்ஸ்க்ருத பாஷையில் அந்தச் சர்ச்சை நடந்தால், அந்தப் பாஷாஜ்ஞாநமில்லாத மற்றவர்களுக்கு அது விளங்காமலிருக்குமென்று சங்கித்து, தமிழ் கலந்த ஸம்ஸ்க்ருத நடையில் விஷயங்களைப் பற்றி அவர்கள் வ்யவஹரிக்க, அதில் உத்ஸாஹமுள்ள மற்றவர்களும் அவர்களாற் செய்யப்பட்ட ஆக்ஷேப ஸமாதாநங்களை நன்றாக உணர்ந்து அதை மிகவும் ஆநந்தித்தார்கள். வித்வான்களுக்கும் உபந்யாஸாதிகளில் விட இதில் அதிக நோக்கம் இருந்தது என்பதும் வெளிப்பட்டது. இம்மாதிரியான சர்ச்சைகளால் நமது மதஸ்தாபநமாவது அந்யர்களுடைய மதத்தின் பங்கமாவது செய்யப்படவேண்டுமென்பது நமது கருத்தன்று. இப்படிப்பட்ட ஒரு ஏற்பாடு நடைபெற்று வந்தால், அநேகர்களுக்கு இது சாஸ்த்ர பரிசயத்தை ஸமீசீநதரமாகச் செய்ய ஒரு ப்ரோத்ஸாஹம் ஹேதுவாகுமென்றும், இம்மாதிரியான சர்ச்சைகளில் அவரவர்களுடைய புத்தி கௌசலத்துக்குத் தக்கபடி யுக்த்யதிசயங்கள் ஸ்புரிப்பதும் அவைகளை சமத்காரத்துடன் அவர்கள் ப்ரயோ

கம் செய்வதும் ச்ரோதாக்களுக்கு ஒரு வித ஸந்தோஷத்தை ஜநிப்பிப்பதுடன் சர்ச்சை செய்யுமவர்களுக்கும் புத்தி தைக்ஷ்ண்யத்தை ஸம்பாதித்துக் கொடுக்குமென்றும் இந்தப் பரிபாடியை நாம் ஆதரிக்க யத்நப்பட்டோம். இது நமக்கு ப்ரதம ப்ரவ்ருத்தியானதனுல், அவ்வளவாக த்ருப்திகரமாக இப்பொழுது நடைபெற்றிராம லிருந்தபோதிலும், இதை மிக்க ப்ரயோஜநவத்தாகச் செய்வதற்கு வித்வான்களெல்லாரும் உத்ஸாஹகர்களாக இருக்கிறபடியால், எவ்வித தோஷமு மின்றிக்கே இது இனி நடைபெறுமென்று நாம் நம்புகிருேம்.

இரண்டாவது - சென்ற ஸம்வத்ஸரத்தில் இந்த ஸபை, ஸகல ஸ்ரீ வைஷ்ணவர்களாலும் ஆதரிக்கப்படும்படி ஒருவித விஸ்தாரத்தை அடைந்தது என்பது ப்ராயேண எல்லாருக்கும் தெரிந்திருக்கும். அப்படி விஸ்தரித்ததைப் பற்றி பல பெயர் பல விதமான அபிப்ராயத்தைக் கொண்டிருக்கிருர்கள். விஷ்ணு பக்தர்களான பாகவதர்களுக்குள் பரஸ்பரம் துராக்ரஹமும் த்வேஷமும் இருக்கும் வரையில் நமக்குப் பகவதநுக்ரஹம் கிடைக்காது என்று உணர்ந்திருக்கும் நாமோ, இந்த விஸ்தாரம், நமது உத்தேச்யமான ஸௌஹார்த்தத்தையும் ஐகமத்யத்தையும் ஸாதித்துக் கொடுக்கத் தகுந்ததென்றும், ஆகையினுல் அதிமாத்ரம் ச்லாகிக்கத் தகுந்ததே என்றும் த்ருடமாக நம்பி யிருக்கிருேம். கலை, வர்ணம், ஆச்ரமம், இவை முதலிய வ்யத்யாஸங்களற ஸர்வ பாகவதர்களுக்கும் பரஸ்பரம் ஸௌஹார்த்தம் இருக்க வேண்டுமென்பதே நமது தீவ்ரமான கொள்கை. ஜந்ம நிபந்தநங்களான அநுஷ்டாநங்களையும் ஸம்ப்ரதாயங்களையும் கொஞ்சமேனும் கைவிடாமல், நாம் பரஸ்பரம் ஹார்த்தமான விச்வாஸத்தையும் ப்ரீதியையும் செய்துகொள்ளலாமென்பது அநுபவத்திற்கும் யுக்திக்கும் ஒத்ததே. அப்படிப்பட்ட ஸாத்விகமான மநோபாவத்தைக் கருதி செய்யப்பட்டிருக்கும் ப்ரக்ருத விஸ்தார விஷயமாக வெவ்வேருன அபிப்ராயங்கள் வெளிப்பட்டால், அது யுக்திஸஹமான ஆலோசனையில்லாததால் உண்டாகின்றதென்றே நாம் நினைக்கிருேம். இந்த ஸதஸ்ஸில், இருகலையாரும் ஒன்று சேர்ந்து பரஸ்பரம் ப்ரீதர்களாக கோஷ்டீ ஸுகாதிகளை அநுபவித்ததும், மற்றவர்களுக்கும் அம்மாதிரியான மநோபாவத்தை ஜநிப்பித்ததுமே இந்த ஸம்வத்ஸரத்திய ஸதஸ்ஸின் மற்ருெரு நூதந ப்ரக்ரியை.

இந்த ப்ரக்ரியை உத்தரோத்தரம் அபிவ்ருத்தமாகி, பஹு கால மாக நமக்குள் பரஸ்பரம் வளர்ந்து வந்திருக்கும் ஆந்தர த்வேஷத்தை வேரறுத்து ஜகத்துக்கே பரம நிஃரேயஸமாயுள்ள ஐகமத்யத்தையும் ஸௌஹார்த்தத்தையும் ஸகல பாகவதர்களுக்கும் ஸாதித்துக்கொடுக்க வேண்டுமென்பது தான் நமது ப்ரார்த்தனை.

இன்னும் இந்த ஸதஸ்ஸைச் சேர்ந்த அநேக விஷயங்கள் இவ்விடத்தில் விஜ்ஞாபநீயங்களாக இருக்கையிலும், அவகாஶம் மிதமாக இருப்பதால் ஒரு அம்ஶத்தை மட்டில் விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறோம். இந்த ஸதஸ் நிர்விக்நமாகவும் பூர்ண பலவத்தாகவும் முடிந்ததற்கு அநேகம் பெயர்களுடைய ஸஹாயம் காரணம். த்ரவ்யத்தினாலும் வாக்கினாலும் ஶரீரத்தினாலும் ஸஹாயம் செய்தவர் பலர். மாநஸிகமான ப்ரீதி பூர்வக அநுக்ரஹத்தினால் உதவி புரிந்தவர் சிலர். இவர்களெல்லாருக்கும் நாம் நமது நன்றியறிவை இப்பொழுது இந்தப் பத்ரிகை வழியாக ஆவிஷ்கரிக்கிறோம். இவர்களுட் சிலர், ஸதஸ் ப்ரயுக்தமான உத்ஸாஹத்தினால் மாத்திர மின்றிக்கே வ்யக்திநிஷ்ட விஃவாஸத்தினாலும் ப்ரீதியினாலும் தூண்டப்பட்டவர்களாய்க்கொண்டு, தமக்கு ஜநிக்கும் க்லேஶத்தைக் கொஞ்சமேனும் பாராட்டாமல் இரவும் பகலுமாக இந்த ஸதஸ்ஸைப் பூர்த்திசெய்து வைக்கும் பொருட்டு மிகப் பரிஃரமப்பட்டிருக்கிறார்கள். அவர்களுள் முக்கியமானவர்கள், மயிலாப்பூர் வாஸிகளான நமது ஸுஹ்ருத்துக்கள். ‘இந்த ஸதஸ்ஸை நடத்துவதை ஏற்றுக்கொண்டிருக்குமவன் நமது விஃவாஸ பாத்ரமன்றோ? தவிரவும் அதைச் சரிவர நடத்த அஶக்தனுச்சுதே!’ என்று கருணையாற்போல ஸமஸ்த லௌகிக வ்யாபாரங்களையும் வைதிக வ்யாபாரங்களையும் தமக்குள் விபாகித்துக்கொண்டு, அவைகளில் அளவற்ற உத்ஸாஹத்துடன் ஹார்த்தமாக ப்ரவ்ருத்தித்து, ஒரு விதத்திலும் எவ்வித குறைவும் ஸம்பவிக்காமல், ஸதஸ்ஸைப் பூர்த்தி செய்துவைத்த அவர்களுக்கு, நாம் விஶேஷித்த க்ருதஜ்ஞதையைப் பாராட்டுகிறோம்; அந்த உபகாரத்தை ஒரு பொழுதும் மறவாமல் ஸதா மாநஸ்ஸில் அநுஸந்தாநம் செய்துகொண்டிருப்போமென்றும் இதனால் வெளிப்படுத்தத் துணிகின்றோம்.

மயிலாப்பூர், 8-1-17. } எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ:

## ஆறுவது ஸ்ரீ வைஷ்ணவ மஹா ஸங்கம்.

# ஸ்வாகதம்.

[இது, சென்ற மார்கழி மாஸத்தில், மயிலாப்பூரில் நடந்த ஸ்ரீ வைஷ்ணவ மஹா ஸங்கத்தில், ஸ்ரீ. உப. ராவ் பஹதூர் எஸ். ராமஸ்வாமி ஐயங்காரால், அந்த ஸதஸ்ஸுக்கு எழுந்தருளி யிருந்த ஸ்வாமிகளுக்குச் செய்யப்பட்ட ஸ்வாகத உபந்யாஸம்.]

புராண ப்ரஸித்தமாய், ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த கூடஸ்தர்களில் முதன்மை பெற்றவர்களான நித்யஸூரி அவதாரர்களான முதலாழ்வார்களில் ஒருவராய், ஸ்ரீ பகவத் கதாம்ஶராய் அவதரித்தருளிய பேயாழ்வார் நமது குலதனமான ஸ்ரீ ஆதிகேஶவ ஸ்வாமி கைங்கர்ய போகத்தை அநுபவித்த இந்தத் திவ்ய தேசத்தில், ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனுடைய கடாக்ஷ பாதத்தாலே அத்யந்த மஹிமையை அடைந்த இந்த மஹாமண்டபத்தில் விஶேஷமான க்ருபையினாலே அடியோங்களை அநுக்ரஹிக்கும் பொருட்டு எழுந்தருளியிருக்கும் பரமைகாந்திகளுக்கும் மஹாந்களுக்கும், ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் கார்ய நிர்வாஹ கைங்கர்யத்திற்கு ஏற்பட்டிருக்கும் ஸங்கத்தினர்களுக்காக அவர்களுடைய நியமநத்தை ஶிரஸ்ஸில் வைத்து, அவர்களில் ஒருவரான தாஸன், அடியோங்களுடைய க்ருதஜ்ஞதையை விஜ்ஞாபநம் செய்து கொள்ளுகிறேன். இந்தப் பாகவதகோஷ்டியின் மஹிமை ப்ரபாவம் வாசாமகோசரம். இவைகளை அறிய அஶக்தர்களாயிருக்கும் அடியோங்கள், அப்படிப்பட்ட பாகவதோத்தமர்களுக்கு ஏற்ற ஆராதநம் செய்ய எள்ளளவிலும் அர்ஹருமல்லர்; ஶக்தருமல்லர். ஆயினும் பாகவத நிஷ்டமான ஔதார்யத்தை நினைத்து, அடியோங்களுடைய தாழ்மைகளையும் குறைவுகளையும் மறந்து, அடியோங்களுக்கு உள்ள ஶ்ரத்தைகளையும் ருஜுபாவத்தையும் மாத்ரமே திருவுள்ளம்பற்றி, அடியோங்களை தந்யர்களாய்ச் செய்தருளி, இந்த ஸபையின் உத்தரோத்தர வ்ருத்தியை அநுக்ரஹிக்கும்படி ப்ரார்த்திக்கிறேன்.

2. இந்த ஸபையை முதலில் 'ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்யஸபை, யென்று ஆரம்பித்து, அதற்கு உபகரணமாயும் அங்கமாயும் உள்ள 'வேதாந்த தீபிகை' என்னும் பத்ரிகையை ஏற்படுத்தி, ஸ்ரீமடத்துஶிஷ்யர்கள், ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தை வ்ருத்தி செய்துகொண்டு வந்தார்கள் என்பதும், சென்ற வர்ஷம் அந்த நாமத்தை மாற்றி ஸகல ஸ்ரீ வைஷ்ணவர்களும் ஸ்ரீ மடத்து ஶிஷ்யர்களுடன் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தினுடைய போக்யாம்ஶங்களை அநுபவித்து ஆநந்தமடைய வேண்டுமென்று இந்த ஸபை 'ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தஸபை' என்று பெயரிடப்பட்டது என்பதும் அநேகமாக எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இதன் முக்ய தாத்பர்யம்: ஸ்ரீபாஷ்யகார ஸித்தாந்தமாகிற வ்ருக்ஷத்திற்கு, ஸம்ப்ரதாயபரம்பரை ஆசார்ய பரம்பரை முதலானவற்றால் ஏற்படக்கூடிய ப்ரகாரங்களை யெல்லாம் ஶாகைகளாகக்கொண்டு, அவையெல்லாம் பரஸ்பரம் உபஜீவ்யமாக இருக்கும்படியான மார்க்கத்தையே தேடவேண்டுமென்பது தான். இந்த ஸபை இவ்விதம் ஏற்பட்ட பிறகு, ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்யர்களுடன் அநேக ஸ்ரீ வைஷ்ணவர்களும் சேர்ந்து ஸபையை நடத்திவருகிறார்கள்.

3. சென்ற வர்ஷத்தில் திருமலையில் இதற்கு ஒரு கிளையும் அந்தக்கிளை ஏற்படுத்தப்பட்டு ஸபையும் நடந்து வருகிறது. சில நாட்களுக்கு முன் 'கோயில்' என்கிற 'ஸ்ரீரங்கம்' என்னும் திவ்ய தேசத்திலும் ஒரு ஸபை ஏற்படுத்தப்பட்டு, இந்த ஸபையின் நோக்கத்தை ஒத்து அது நடந்து வருவதாயும் ஸ்ரீ வேதாந்த தீபிகையே அதற்கும் உபகரணமான ஸஞ்சிகையாக அங்கீகரிக்கப்பட்டிருப்பதாயும் தெரியவருகிறது. அதிலிருந்து சில கனவான்கள் இந்த ஸதஸ்ஸுக்கு விஜயம் செய்திருக்கிறார்கள். இவ்விதமாகவே பற்பல இடங்களில் ஸபைகள் ஏற்பட்டு, ஸித்தாந்தம் பரவித்தழைத்து, ஸ்ரீ வைஷ்ணவர்கள் எல்லோரும் ஒருமித்துத் தங்கள் தங்கள் பரம்பரா ரீதியாய் மாத்ஸர்யமின்றி, திவ்ய தேசங்களில் அர்ச்சாரூபமாய்த் தனது கல்யாணகுணாநுபவம் பண்ண ஸுலபமாய் அவதரித்திருக்கும் எம்பெருமான் ஸந்நிதிகளில் இதரர்கள் கண்ணுற்று ஆஶ்சர்யப்படும் விதமாகக் கைங்கர்யங்களை நடத்தி, குணாநுபவம் செய்யத்தக்க மார்க்கங்களை இந்த ஸதஸ்ஸில் மஹான்கள் யோஜிக்கவேண்டி யிருக்கிறது.

4. மேற்சொல்லிய விஷயத்தில் முதலில் கவனிக்க வேண்டியவை: ஆசார்ய பரம்பரை அநுஷ்டாந பரம்பரை முதலிய காரணங்களைப்பற்றித் தத்காலம் அடிக்கடி உண்டாகும் மநோ விகாரங்களையும், ஆக்ரஹ க்ருத்யங்களையும் குறைக்க வேண்டிய உபாயங்கள் முதலியன. இவை விசேஷமாக இப்போது வ்ருத்தியாகி வரும் ஸ்தலங்கள், ஆழ்வார் ஆசார்யர்கள் ஈடுபட்டு மெய்மறந்து பகவதநுபவத்தில் மூழ்கி, ப்ருஹ்மாநந்தத்தை இந்த லோகத்திலேயே அநுபவித்துவந்த கோயில், திருமலை, பெருமாள் கோயில். கால விசேஷத்தால் அவ்விடங்களில் வ்ருத்தியாய்வரும் ப்ராக்ருத ஸம்பந்தமான வ்யாபாரங்கள், ஸித்தாந்தத்திற்கும் அதைச் சரணமடைந்த பரமைகாந்திகளுக்கும் அவர்கள் அநுபந்தியான மந்தர்களான தாஸர்களுக்கும் மானக்குறைவை உண்டு பண்ணியும் ஆசார்யன் ஸூக்திகளினால் நமது மநோநிஷ்டையையும் நமது மனப்பயிற்சியையும் கண்டு விஸ்மய மடையும்படியான இதரர்களிடத்திலும், ஸித்தாந்தத்தில் ஒரு ஹேளந புத்தியையும் பரிஹாஸோக்திகளையும் உண்டுபண்ண ஹேதுவாயு மிருக்கின்றன. இதனால் திவ்ய தேசங்களையும் அவைகளின் மஹிமைகளையும் நாம் இழந்து விடுவது மன்றி நமக்குப் பரமோபகாரர்களான ஆழ்வார் ஆசார்யர்களுடைய ஸ்மாரகங்களான அடையாளங்கள் பொருந்திய திவ்ய தேசங்களில் ப்ரீதி விசேஷமும் குன்றுகிறது. அந்த இடங்களில்போனமாத்ரம் ஆசார்ய ஜ்ஞாபகத்தால் உடம்பு பூரித்து மனமகிழ்ந்து யாம் வர்த்திக்க வேண்டிய உத்தமமான வ்யாபாரங்களையும் நினைக்க ஹேது வில்லாமல், கேவலம் லௌகிகமாக தேச சரித்ரம் காலவ்யதிக்ரமம் முதலிய விஷய பரிசீலநம் செய்துவரும்படி ஏற்படுகிறது. ஆகையால் அப்படிப்பட்ட திவ்ய தேசங்களில் ஸாத்விகமான மநோ வ்யாபாரங்களை ஜ்ஞாபகப் படுத்தக்கூடிய மாதிரி அர்ச்சாரூபமாக எழுந்தருளி யிருக்கும் பகவானுடைய கைங்கர்யங்களை, யார், யார், அவரவர் ஸம்ப்ரதாய ப்ராப்தமான ப்ரகாரம் செய்தருளினாலும், அவை யாவற்றையும் தாம்தாம் செய்ததுபோல அநுபவித்து இருளிலாப் பெருஞாலமான நித்ய விபூதியில் அநுபவிக்கிற விதத்திற்கு வாசியற அநுபவிக்கும்படியான மார்க்கத்தைச் சிந்திக்க வேண்டியது.

இன்னும் ஒரு விஷயம்: தத்காலத்தில் பாச்சாத்ய வித்யையில் ப்ரவீணராயும் விசேஷமான புத்திப்பயிற்சி யுள்ளவர்களா

2. இந்த ஸபையை முதலில் 'ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்யஸபை, யென்று ஆரம்பித்து, அதற்கு உபகரணமாயும் அங்கமாயும் உள்ள 'வேதாந்த தீபிகை' என்னும் பத்ரிகையை ஏற்படுத்தி, ஸ்ரீமடத்துஶிஷ்யர்கள், ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தை வ்ருத்தி செய்துகொண்டு வந்தார்கள் என்பதும், சென்ற வர்ஷம் அந்த நாமத்தை மாற்றி ஸகல ஸ்ரீ வைஷ்ணவர்களும் ஸ்ரீ மடத்து ஶிஷ்யர்களுடன் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தினுடைய போக்யாம்ஶங்களை அநுபவித்து ஆநந்தமடைய வேண்டுமென்று இந்த ஸபை 'ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தஸபை' என்று பெயரிடப்பட்டது என்பதும் அநேகமாக எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இதன் முக்ய தாத்பர்யம்: ஸ்ரீபாஷ்யகார ஸித்தாந்தமாகிற வ்ருக்ஷத்திற்கு, ஸம்ப்ரதாயபரம்பரை ஆசார்ய பரம்பரை முதலானவற்ருல் ஏற்படக்கூடிய ப்ரகாரங்களை யெல்லாம் ஶாகைகளாகக்கொண்டு, அவையெல்லாம் பரஸ்பரம் உபஜீவ்யமாக இருக்கும்படியான மார்க்கத்தையே தேடவேண்டு மென்பது தான். இந்த ஸபை இவ்விதம் ஏற்பட்ட பிறகு, ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்யர்களுடன் அநேக ஸ்ரீ வைஷ்ணவர்களும் சேர்ந்து ஸபையை நடத்திவருகிருர்கள்.

3. சென்ற வர்ஷத்தில் திருமலையில் இதற்கு ஒரு கிளையும் அந்தக்கிளை ஏற்படுத்தப்பட்டு ஸபையும் நடந்து வருகிறது. சில நாட்களுக்கு முன் 'கோயில்' என்கிற 'ஸ்ரீரங்கம்' என்னும் திவ்ய தேசத்திலும் ஒரு ஸபை ஏற்படுத்தப்பட்டு, இந்த ஸபையின் நோக்கத்தை ஒத்து அது நடந்து வருவதாயும் ஸ்ரீ வேதாந்த தீபிகையே அதற்கும் உபகரணமான ஸஞ்சிகையாக அங்கீகரிக்கப்பட்டிருப்பதாயும் தெரியவருகிறது. அதிலிருந்து சில கனவான்கள் இந்த ஸதஸ்ஸுக்கு விஜயம் செய்திருக்கிருர்கள். இவ்விதமாகவே பற்பல இடங்களில் ஸபைகள் ஏற்பட்டு, ஸித்தாந்தம் பரவித்தழைத்து, ஸ்ரீ வைஷ்ணவர்கள் எல்லோரும் ஒருமித்துத் தங்கள் தங்கள் பரம்பரா ரீதியாய் மாத்ஸர்யமின்றி, திவ்ய தேசங்களில் அர்ச்சாரூபமாய்த் தனது கல்யாணகுணுநுபவம் பண்ண ஸுலபமாய் அவதரித்திருக்கும் எம்பெருமான் ஸந்நிதிகளில் இதரர்கள் கண்ணுற்று ஆஶ்சர்யப்படும் விதமாகக் கைங்கர்யங்களை நடத்தி, குணுநுபவம் செய்யத்தக்க மார்க்கங்களை இந்த ஸதஸ்ஸில் மஹான்கள் யோஜிக்கவேண்டி யிருக்கிறது.

4. மேற்சொல்லிய விஷயத்தில் முதலில் கவனிக்க வேண்டியவை: ஆசார்ய பாரம்பரை அநுஷ்டாந பரம்பரை முதலிய காரணங்களைப்பற்றித் தத்காலம் அடிக்கடி உண்டாகும் மனோ விகாரங்களையும், ஆக்ரஹ க்ருத்யங்களையும் குறைக்க வேண்டிய உபாயங்கள் முதலியன. இவை விசேஷமாக இப்போது வ்ருத்தியாகி வரும் ஸ்தலங்கள், ஆழ்வார் ஆசார்யர்கள் ஈடுபட்டு மெய்மறந்து பகவதநுபவத்தில் மூழ்கி, ப்ருஹ்மாநந்தத்தை இந்த லோகத்திலேயே அநுபவித்துவந்த கோயில், திருமலை, பெருமாள் கோயில். கால விசேஷத்தால் அவ்விடங்களில் வ்ருத்தியாய்வரும் ப்ராக்ருத ஸம்பந்தமான வ்யாபாரங்கள், ஸித்தாந்தத்திற்கும் அதைச் சரணமடைந்த பரமைகாந்திகளுக்கும் அவர்கள் அநுபந்தியான மந்தர்களான தாஸர்களுக்கும் மானக்குறைவை உண்டு பண்ணியும் ஆசார்யன் ஸூக்திகளினால் நமது மனோநிஷ்டையையும் நமது மனப்பயிற்சியையும் கண்டு விஸ்மய மடையும்படியான இதரர்களிடத்திலும், ஸித்தாந்தத்தில் ஒரு ஹீநபுத்தியையும் பரிஹாஸோக்திகளையும் உண்டுபண்ண ஹேதுவாயு மிருக்கின்றன. இதனால் திவ்ய தேசங்களையும் அவைகளின் மஹிமைகளையும் நாம் இழந்து விடுவது மன்றி நமக்குப் பரமோபகாரர்களான ஆழ்வார் ஆசார்யர்களுடைய ஸ்மாரகங்களான அடையாளங்கள் பொருந்திய திவ்ய தேசங்களில் ப்ரீதி விசேஷமும் குன்றுகிறது. அந்த இடங்களில்போனமாத்ரம் ஆசார்ய ஜ்ஞாபகத்தால் உடம்பு பூரித்து மனமகிழ்ந்து யாம் வர்த்திக்க வேண்டிய உத்தமமான வ்யாபாரங்களையும் நினைக்க ஹேது வில்லாமல், கேவலம் லௌகிகமாக தேச சரித்ரம் காலவ்யதிக்ரமம் முதலிய விஷய பரிசீலநம் செய்துவரும்படி ஏற்படுகிறது. ஆகையால் அப்படிப்பட்ட திவ்ய தேசங்களில் ஸாத்விகமான மனோ வ்யாபாரங்களை ஜ்ஞாபகப் படுத்தக்கூடிய மாதிரி அர்ச்சாரூபமாக எழுந்தருளி யிருக்கும் பகவானுடைய கைங்கர்யங்களை, யார், யார், அவரவர் ஸம்ப்ரதாய ப்ராப்தமான ப்ரகாரம் செய்தருளினாலும், அவை யாவற்றையும் தாம்தாம் செய்ததுபோல அநுபவித்து இருளிலாப் பெருஞாலமான நித்ய விபூதியில் அநுபவிக்கிற விதத்திற்கு வாசியற அநுபவிக்கும்படியான மார்க்கத்தைச் சிந்திக்க வேண்டியது.

இன்னும் ஒரு விஷயம்: தத்காலத்தில் பாஸ்சாத்ய வித்யையில் ப்ரவீணராயும் விசேஷமான புத்திப்பயிற்சி யுள்ளவர்களா

யும் பரிசுத்தமான மநோதர்மங்களை யுடையவர்களாயும் தேசாந்தர சரித்ரங்களின் பயிற்சியினாலும் தேசாந்தரர்கள் ஸம்பாஷணத்தாலும் அவரவர்களின் குணதோஷங்களைச் செம்மையாகத் தெரிந்து, நமது தேசத்தவர்களின் குறைகளைக்கண்டு அவற்றை நிவ்ருத்தி செய்து, தேசவ்ருத்தி, ஸுகஜீவநவ்ருத்தி, ததுபாயங்கள், நமது லௌகிக பயிற்சிவ்ருத்தி, இவைகளைச் செய்யவேண்டுமென்று ஊக்கத்துடன், ஸகல வர்ணாச்ரமஸ்தர்களும் ஆசண்டாளம் எல்லாரும் ஸுகமாக ஜீவிக்கும் மனப்பயிற்சி தேகப்பயிற்சி அடையும் மார்க்கங்களைத் தேடுபவர்களாயும் உள்ள அநேக நவாங்களும் ப்ரபுக்களும் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பரமைகாந்திகளுடைய ஸம்ஸர்க்க விசேஷமும் ஸல்லாபாதி விசேஷங்களும் அவர்களுடைய ஆந்தரபாஹ்யமான ஆசாராநுஷ்டாந ஸாக்ஷாத்காரங்களும் நேருவதற்கு மார்க்க மன்றியில் இவர்கள் ப்ராயச: கார்யா ஸக்தர்களாகவும் நகரஸ்தர்களாகவும், அவர்கள் ப்ராயச: ஆத்ம தர்மத்திற்கும் சமாத்யநுஷ்டாநத்துக்கும் குறைவு வருமென்கிற பயத்தாலும் ஸங்கரத்தால் தர்ம லோபத்தையும் சங்கித்து, க்ராமவாஸிகளாயும் ஏகாந்தவாஸ ப்ரியர்களாயும் இருக்கின்றார்கள். அவ்வாறே நமது பாலர்களும் லௌகிக ச்ரேயஸ்ஸை ஸாதித்துக்கொள்ளும் நிமித்தம் பாஷாந்தராப்யாஸம் தேசாந்தரப்பயிற்சி ஜ்ஞாநம் அடைய நகரங்களில் வஸிப்பவர்களாய்ப்போய் சிஷ்டாசாராநுஷ்டாநங்களை ஸாக்ஷாத்கரித்து, அதைத் தன் நடவடிக்கைகளில் சேர்த்துக்கொள்ள மார்க்கமில்லாமல் இருக்கிறார்கள். இவ்விதம் இருந்துவரும் இருதிறத்தவர்களுக்கும் இருவிதப் பயிற்சியும், [அதாவது, சாரீரகமாயும் பாஹ்ய லௌகிகமாயும் உள்ள விஷயப் பயிற்சியும் ஆந்தரவிஷயமாயுள்ள மநஸ் ஆத்மா இவைகளின் பயிற்சியும்] ஒன்றுக்கொன்று விரோதமின்றி பரஸ்பரம் உபகாரகமாய் ஐஹிக ஆமுஷ்மிக ச்ரேயஸ்கரமாக வ்ருத்தியாக வேண்டிய அம்சத்தை மஹான்கள் ஆலோசிப்பார்களாக.

இனி அடியேனுடைய அதிப்ரஸங்கங்களையும் அடியோங்களுடைய ஆதித்யாதிகளில் உள்ளந் யூநாதிக்யங்களையும் நோக்காமல் மறந்து, அடியோங்களை ஸம்ரக்ஷித்து நிர்விக்நமாக இந்த ஸபையின் கார்யங்களை முடிக்கும்படி கோருகிறேன்.

ராவ்பஹதூர் எஸ். ராமஸ்வாமி ஐயங்கார்.

# SRI VAISHNAVA SIDDHANTA SABHA, MADRAS.

## The Sixth Annual Conference.

## PRESIDENTIAL ADDRESS.

The Hon'ble Justice K. Srinivasa Iyengar, B. A., B. L., rose amidst loud applause and delivered the following interesting, instructive and inspiring address :—

Gentlemen,—I accepted the task of opening this Conference with considerable diffidence and if I had known that I would have to face this learned audience I would certainly have declined the offer to enable you to select one more learned than myself, more worthy than myself to address you on this occasion.

I have to begin with an apology for addressing you in English; for it has so come to pass that your English educated person has had time to forget his Vernacular and could not manage a speech even on the simplest or the most intimate and vital subject without a large admixture of foreign words so as to make his language unrecognisable. I was told by Mr. Vasudeva Chariar that your proceedings were always conducted in Tamil and I therein espied a loophole of escape from the task imposed on me; but he gave me liberty to speak in English.

Our great religious literature is in unspoken Sanskrit and even after our great-hearted Acharyas began to teach us in our Vernacular, so that all may understand, we have not cared to cultivate even that. To an ordinary cultured person, our Tamil Literature is as much a sealed book as the classical Sanskrit.

Time was, and that not long since, when the so-called educated person fed with the marvels of the 19th century science was willing to brush aside as silly superstition the precious thoughts of the great teachers, the great seers who gave out great truths. Fortunately all that is

changing. We cannot so easily get rid of our precious heritage. There is now a genuine desire on our part to know and understand our religious literature and those of us who are educated in Western scientific methods are beginning to appreciate the rigid logic and the brilliant intellectual quality of that literature.

According to us every act and every thought is and must be a preparation for a higher spiritual life and the least that we can do is to sit humbly at the feet of those who are able to teach us, and learn. There is a certain amount of impatience at the traditional method of teaching but it must be remembered that human speech and language is but a poor medium to express spiritual truths. Nothing can be more beautiful than the relation of Guru or Acharya to the pupil or Sishya as conceived in our religious literature; and if we think that a considerable number of pretended gurus are cheats or ignorant impostres, if we will only search for them, we will not find much difficulty in finding men of real knowledge and sanctity of life willing and able to impart that knowledge or give us the training necessary for further progress. It is therefore necessary that the Western educated man and the Pandit learned in traditional knowledge should come into contact with each other; and without a close and careful cultivation of Vernacular so as to make the ordinary speech of the cultured person capable of expressing the highest thoughts and without a much more general spread of Sanskrit the contact is neither possible nor useful. It is here that the wealthy Mutts scattered all over the Presidency can be of great service.

I have no desire to trouble you with the origin of these Mutts but those of you who want information will find it in the classical Judgment of Sir T. Muthuswamy Iyer, one of the greatest lawyers this province produced and a most pious Brahmin. These mutts were endowed with large properties to enable the heads to impart religious instruction to people. The mutts were Colleges for religious teaching and for the teaching of the Sastras. Unfortunately the original purpose is mostly forgotten and vast revenues are wasted in useless expenditure. The revenues, if properly utilised, will be found sufficient to support several Hindu Universities.

Public sentiment and the character of the heads who were pious ascetics were in former times found sufficient to ensure the proper

administration of these valuable properties; but I am afraid nowadays they do not afford sufficient safeguards and the tendency is to look upon them as the private property of the heads. It is interesting to note that recently the Privy Council characterised these mutts as public trusts as, in fact, we always considered them to be.

Though a very large portion of the income of the temples is needed for the worship, in some of the noted temples at least a very considerable sum can be released for the teaching of the Agamas so that the Archakas and other worshippers in temples may realise the use of the temples as a source of spiritual joy and development. There has been a tendency on the part of some the English educated people, due no doubt to the undisguised contempt in which the so-called worship of the idols is held by foreign thinkers, to condemn such worship, at any rate to imagine that such worship was not intended to such superior persons as themselves. It need scarcely be pointed out that we do not worship the stone, the wood or the brick and mortar, but the spiritual idea or ideal behind. It must be remembered that the great Alwars, the passionate devotees of God have found grace within the Holy of Holies of these temples and have been divinely inspired. I fondly believe that holy thoughts are equally subject to the laws of conservation of energy and may perhaps linger to inspire one out of the countless millions who go to the temple for worship. If perchance they enable you for a few minutes in a day to lift yourself above the petty worries, anxieties and hopes of things earthly, to contemplate of things which almost all mankind agree to think is higher, you have no right to neglect them. It seems to me that after all it is really ignorance which makes you ashamed of temple worship, and knowledge of the meaning of rituals and symbols is necessary before we can adequately profit by that worship. There is no mystery about truths and there should not be any about the most absolute truths. There is no excuse whatever for our ignorance; there is no excuse whatever for any neglect of the processes which lead you on to those truths. I am afraid that owing to ignorance we are fast losing our grip of facts, and to a considerable number who still cling on to the forms of religious exercise they are nothing more than meaningless symbols. We cannot disguise from ourselves that as many go to a

temple for fun as from piety. It behoves then those who have been educated in western methods to use these instruments of knowledge for a critical study of our religious literature and spread that knowledge as far as possible. It is equally their duty to see that all funds legitimately available for that purpose are so utilised. I cannot here omit to mention what the Dharma Rakshana Sabha with its handful of patriotic Hindus, without any funds at its back, has been able to achieve in correcting abuses in temple administration.

There is one matter in connection with our Vishnu temples which I cannot omit. We pretend to be the followers of the great Udayavar who was willing to forfeit his immortal soul if he can bring salvation to the multitude without distinction of caste. For I have heard of the beautiful story that when he was told of the mantram which he was to keep secret on pain of eternal hell, he proclaimed it from the hilltops for all mankind to be saved. But yet we allow small doctrinal differences or even petty differences in practice to keep us asunder as "Tengalais' and "Vadagalais" and we have the most unedifying disputes as to the 'patram' and 'mantram,' as to who should have the first teertham or the last, or even as to who should sit beneath a particular pillar when reciting stotrams in the presence of God. No sane man can imagine that such things add to spirituality or to seemly worship. There is no salvation for persons who think or say that stotrams in praise of one Acharya or the other is blasphemous and it is about such stotrams that most of the temple fights arose. It is an indication of the degeneracy of the latter days which has twisted all duties into rights.

I have had a good deal to do with these litigations in the course of which I had to study the ancient history of many of these institutions. The conclusion I have come to is that, when temple rituals were reframed at or after the time of the introduction of the Tamil Prabandam so as to suit them for the common people who understood only the Vernaculars, it was thought necessary to employ a certain number of people to recite them out and pay for it as those services were considered inferior; but it has since gained in prestige so much so that the office-holders claim a monopoly and the ordinary worshippers attempt to get a share of the office by means fair or foul. I have no desire to touch on the controversies as to caste or the Brahmin versus non Brahmin. We in this

Conference are not concerned with the fair distribution of Government posts or the allotment of political rights. What we are concerned with is as to how to develop and progress in the spiritual plane and that progress we want not merely to the Brahmins but to all castes alike.

The fabric of our society was framed for spiritual ends and not for accumulating wealth or even for material welfare except as a means to that end. To achieve that supreme end, each had his duty to perform and that duty fixed his caste. There was no question of superiority but only a differentiation of function. There was no question of rights for anybody but a protection in the performance of that duty fixed on him. These duties after careful consideration were fixed and prescribed in the Varnashrama Dharma which, if followed as prescribed, is likely to lead to righteousness. These are not cast iron laws. Some of the rules, either owing to our ignorance or change of circumstances may appear arbitrary, meaningless or absurd, we have, however, no right to summarily reject whatever does not suit our convenience or taste without an attempt to understand them. Some of them which at first sight appeared to be silly have subsequently been proved to be sound. At the same time we must remember that these laws of conduct come down to us from a time when Nature was nearer to us, when the world was not too much with us, and more than all when the organic life of society was directed towards spiritual ends. If each of us should do our duty as prescribed, I have no doubt we shall have less of any jealous questioning of each other's rights. Spiritial wealth is unlimited and each can take as much as he wants; as much as he can but only we do not know what is good for us. Knowledge, the highest knowledge, is for all and the more you give the more you have.

Gentlemen, I have done. I do not like to think that this assembly is merely a sectarian Conference intended to benefit Sri Vaishnavites alone. We have no quarrel with others. We merely want to develop in the ways pointed out by our Acharyas. Our duty should be not merely to meet for a few days and disperse. We should, as much as is in us, spread the knowledge of Visishtadvaitic Philosophy and religion, rescue forgotten books from oblivion, preserve those that are likely to be lost and enter into an active propaganda for the spread of true knowledge as we understand it.

K. SRINIVASA IYENGAR.

ஸ்ரீ:

# ஸ்ரீ பாஞ்ச ராத்ரமும்

# ஸ்ரீ வைஷ்ணவாசாரமும். *

1. நமக்கு ச்ருதிகள், ஸ்ம்ருதிகள், இதிஹாஸங்கள், புராணங்கள் இவை ப்ரமாணங்கள். இவைகளில் ச்ருதிகளின் விஷயங்களை மற்றவை வ்யாக்யாநம் செய்வதால் அவைகளுக்கு உபப்ரஹ்மணங்கள் என்று பெயர். இவைகளல்லாமல் நம் தேசத்திய ஒவ்வொரு அவாந்தர மதஸ்தரும் தங்கள் தங்களுக்கு ஆதாரமாக சிற்சில ஆகமங்களென்கிற க்ரந்தங்களை ஆதரித்து வருகிறார்கள். அவைகள் பௌத்த, ஜைந, சாக்த, பாசுபத, பாஞ்சராத்ரங்களாக ஐந்துவகைப்பட்டன. அவற்றுள் பாஞ்சராத்ராகமம் என்பதைப் பற்றிச் சில விஷயங்களைச் சொல்லுகிறோம்.

2. பாஞ்சராத்ரம் என்று ஏன் பெயர் வந்தது? இதற்கு மூலம் நிச்சயமாய்ச் சொல்லக்கூடவில்லை. பல வகையாய் இந்தப் பெயரை இந்த ஆகமங்களே நிர்வசநம் செய்கின்றன.

(1) சிலர், ஸ்ரீமந்நாராயணன் இந்த ஆகமத்தின் ஸம்ஹிதைகளென்னப்படும் க்ரந்தங்களை, ஐந்து ராத்ரிகளில், அநந்தன் கருடன் விஷ்வக்ஸேநன் ப்ரஹ்மா ருத்ரன் ஆகிய ஐந்து அதிகாரிகளுக்கு முதலில் உபதேசம் செய்ததால் இதற்குப் பஞ்சராத்ரம் என்று பெயர் என்கிறார்கள்.

(2) வேறு சிலர், ஐந்து விரோதிகளான தந்த்ரங்களை ராத்ரியாக, அதாவது இருட்டி மங்கிப்போனதாகச் செய்வதால், இவைகளைப் பஞ்சராத்ரம் என்கிறார்கள்.

---

* இந்த விஷயம், மயிலாப்பூரில் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் 6 - வது வார்ஷிக மஹா ஸங்கத்தில் 27-12-1916 - ல் ஸ்ரீ. உப. டி. ராஜகோபாலாசாரியரால் செய்யப்பட்ட உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம்.

பஞ்சேதராணி ஶாஸ்த்ராணி ராத்ரீயந்தே மஹாம்த்யபி। *
தத்ஸந்நிதௌ ஸமாக்யாஸௌ தேந லோகே ப்ரவர்த்ததே॥

[பாத்ம தந்த்ரம்.

(3) சிலர் அபிப்பிராயம், ஐந்து ஜ்ஞானங்களை போதிப்பதால் இதற்கு இந்தப் பேர் வந்தது. அவை: தத்வம், முக்தி, பக்தி, யோகம், வைஷயிகம் என்பன.

ராத்ரம் ச ஜ்ஞாநவசநம் ஜ்ஞாநம் பஞ்சவிதம் ஸ்ம்ருதம்।
தேநேதம் பஞ்சராத்ரம் ச ப்ரவதந்தி மநீஷிண:॥

[நாரதபஞ்சராத்ரம்.

(4) இன்னும், இதற்கு எதிரிடையாய், ராத்ர மென்றால்-அஜ்ஞானம்; பஞ்ச வென்றால் - அதைப் போக்கடிப்பது; அதனால் பஞ்சராத்ர மெனப்பெயர் பெற்றது என்று சிலர் சொல்லுகிறார்கள்.

ராத்ரிரஜ்ஞாநவசநம் பஞ்சேத்யஜ்ஞாந நாஶகம்।

[ஸ்ரீப்ரஶ்நம்.

(5) ஐந்து விதமாய் அதாவது பரம், வ்யூஹம், விபவம், ஹார்தம், அர்ச்சை என்று பகவதாவிர்பாவங்களை இந்த சாஸ்திரம் போதிப்பதால் இதற்கு இந்தப் பெயர் அமைந்தது என்று வேறு சிலர் வாக்யம்.

(6) சதபத ப்ராஹ்மணத்தில் பஞ்சராத்ர மென்றொரு ஸத்ரம் சொல்லியிருப்பதால் அதை அநுஸரித்து இந்தப் பெயர்வந்திருக்கலாம் என்று சில பாஶ்சாத்யர்களின் ஊஹம்.

3. இந்த தந்த்ரத்தில் க்ரந்த விஸ்தாரம். இந்த தந்த்ரம் பஹு விஸ்தாரமாயுள்ளது. ஸமீபத்தில், அடையார் லைப்ரெரியின் அத்யக்ஷரான டாக்டர் ஷ்ராடர் என்பவர் இந்த விஷயத்தைப் பரிசீலநம் பண்ணி அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை என்ற ஒரு பாஞ்சராத்ர க்ரந்தத்தைப் பதிப்பித்து இந்த சாஸ்த்ரத்தில் ஸாமாந்ய விஷயங்களையும் ஷை ஸம்ஹிதையின் விசேஷ விஷயங்களையும் விசதமாய் எழுதி யிருக்கிறார். அதில் இந்த தந்த்ரத்துக்கு ஸம்பத்தமாக 200 ஸம்ஹிதைகளுக்கு மேலிருப்பதாய்த் தெரிகிறது. எல்லாம் $1\frac{1}{2}$-கோடி க்ரந்தங்களென்கிற ஶ்லோகங்களிருப்பதாயும்

* இங்குள்ள வசநங்கள் J. R. A. S. என்னும் பத்ரிகையின் 1911-ம் வருஷத்தின் ஸம்புடத்தில் வித்யாபூஷணம். T. கோவிந்தாசார்ய ஸ்வாமியின் வ்யாஸத்தில் வரைப்பட்டுள்ளவை.

தெரிகிறது. இந்த ஸம்ஹிதைகளில் சில இப்போது அச்சுப் ப்ரதிகளாகவே அகப்படும். அவையாவன :

1. ஈப்ஂவர ஸம்ஹிதை.
2. ஸாத்வத ஸம்ஹிதை.
3. பாத்ம ஸம்ஹிதை.
4. லக்ஷ்மீ தந்த்ரம்.
5. பராசர ஸம்ஹிதை.
6. காபிஞ்சல ஸம்ஹிதை.
7. விஷ்ணு திலகம்.
8. பாரத்வாஜ ஸம்ஹிதை.
9. ஸ்ரீப்ரப்ஂநம்.
10. ப்ருஹத் ப்ராஹ்மம்.
11. அஹிர் புத்ந்யம்.

இவைகள்தவிர சுமார் 12 - வேறு ஸம்ஹிதைகள் ஏட்டுப்ரதிகளில் கிடைக்கின்றன. மற்ற ஸம்ஹிதைகள் இன்னம் வெளியாகவில்லே. ப்ராசீந ஸ்ரீ கோசாலயங்கள் வைத்திருக்கும் ப்ரபுக்கள் இதைக் கவனித்தால் அநேக ஸம்ஹிதைகள் இன்னும் வெளிக்கு வரலாம். நம் ஆசார்யர்களில் ஸ்ரீயாமுனுசார்யர் ஈப்ஂவரஸம்ஹிதை, பரமஸம்ஹிதை, சாண்டில்ய ஸம்ஹிதை முதலான சில ஸம்ஹிதைகளே மாத்ரம் ஆகம ப்ராமாண்யம் என்னும் தமது க்ரந்தத்தில் உதாஹரித்திருக்கிருர். ஸ்ரீராமாநுஜாசார்யரும் 3, 4-ஸம்ஹிதைகளேயே உத்தாரம் செய்திருக்கிருர். ஸ்ரீ வேதாந்த தேசிகனே தம்முடைய பாஞ்சராத்ர ரக்ஷையில் 30 - க்கு மேல்பட்ட ஸம்ஹிதைகளேப் பேராலும் வசநோத்தாரத்தாலும் நிர்த்தேசித்திருக்கிருர். இந்த தந்த்ரத்தின் ஸ்வரூபத்தையும் ப்ரகாரத்தையும் இந்த ஆசார்யரே விஸ்தாரமாய் விசாரித்திருக்கிருர்.

4. பாஞ்சராத்ரத்தின் விஷயங்களும் பேதங்களும். இந்த தந்த்ரத்தில் 4-பாதங்களாக விஷயங்கள் ப்ராயிகமாய் விசாரிக்கப்படுகின்றன. அதாவது, ஜ்ஞாநபாதத்தில் ஈப்ஂவரஸ்வரூபமும் விபூதிகளும் விசாரிக்கப்படுகின்றன. யோகபாதத்தில் யோக ப்ரகாரங்கள் மோக்ஷஸாதநமாக விசாரிக்கப்படுகின்றன. க்ரியாபாதத்தில் தேவாலய நிர்மாணங்களும் ஆராதந ப்ரகாரங்களும் உத்

ஸ்வ ப்ரகாரங்களும் விவரிக்கப்படுகின்றன. சர்யாபாதத்தில், இந்த தந்த்ர நிஷ்டர்களின் தீக்ஷாதிநியமங்களும் ஸம்ஸ்கார க்ரமங்களும் புண்ட்ரதாரணம் முதலான அஸாதாரண வைஷ்ணவ தர்மங்களும் பஞ்சகால விபாகமும் சொல்லப்படுகின்றன. ஒவ்வொரு தந்த்ரங்கள், இந்த விபாகத்தை அவலம்பிக்காமலும், ஒவ்வொரு விஷயத்தைச் சொல்லாமலும் ஸங்க்ரகித்தும் விஸ்தரித்தும் காணப்படுகின்றன. இந்த சாஸ்திரத்தின் பேதங்கள் பல விதமாய் ஏற்படுகின்றன. முதலாவது:—ஆகமஸித்தாந்தம், மந்த்ர ஸித்தாந்தம், தந்த்ர ஸித்தாந்தம், தந்த்ராந்தர ஸித்தாந்தம் என்று நால்வகை ஸித்தாந்தங்களுண்டென்றும், இவைகளில் ஆகம ஸித்தாந்தம் ஸாக்ஷாத்தாய் மோக்ஷப்ரதமென்றும், மற்றவைகள் நாம் கோரினபடி இதர புருஷார்த்தங்களையும் கொடுக்கக் கூடியவையென்றும் தெரிகிறது. இந்த விபாகத்தையே ஸ்வயம், வ்யக்தம், திவ்யம், ஸைத்தம், ஆர்ஷம் என்றும் வ்யவஹரிக்கிறார்கள். இரண்டாவது:—திவ்யம், முநிபாஷிதமென்று இருவகையாய் அவைகளைப் பிரித்து, முநிபாஷிதத்தை ஸாத்விக, ராஜஸ, தாமஸங்களாகவும் பிரிக்கிறார்கள். மேலும் திவ்ய ஸம்ஹிதைகள் முதலானவை ஸ்ரீ பாஞ்சராத்ர ரக்ஷையில் விசதமாய்ப் பரிகணநம் செய்யப்பட்டுள்ளன. ஆனால் இப்படி ஸாத்விக ராஜஸ தாமஸ பிந்நமான ஸம்ஹிதைகளிலும், தாமஸாதி புராணங்களில் போலே அப்ராமாண்ய சங்கை செய்யக்கூடாதென்று கண்டிக்கப் பட்டிருக்கிறது.

5. பாஞ்சராத்ர ப்ராமாண்யம். இந்த விஷயத்தில் ஆகம ப்ராமாண்யமும் ஸ்ரீ பாஷ்யகாரருடைய பாஞ்சராத்ராதிகரண விசாரங்களும் ஸ்ரீ பாஞ்சராத்ர ரக்ஷையும் முக்கியாதாரங்கள். இந்த சாஸ்த்ரத்துக்கு அப்ராமாண்யம் சொல்லும் ஹேதுக்களாவன:

(1) இது, வேத விருத்தங்களாயும் வேதத்திலில்லாததுமான ஸம்ஸ்காரங்களையும் தீக்ஷைகளையும் விதிக்கிறது.

(2) ப்ராயிகமாய் இது சூத்ரர்களாலேயே அநுஷ்டிக்கப் பட்டும் ஆதரிக்கப்பட்டும் வருகிறது.

(3) இந்த சாஸ்த்ரத்தில் வேதாந்த விருத்தமான ஜீவோத்பத்தியும் ஜீவனிடமிருந்து மநஸ்ஸின் உத்பத்தியும் சொல்லியிருக்கிறது.

(4) ஸம்ஹிதா கர்த்தாவான பாண்டில்ய மஹர்ஷி, நாலு வேதங்களிலும் தத்வஜ்ஞாநத்தை அறியாமல் இந்த சாஸ்த்ரத்தை அப்யஸித்தாரென்று சொல்லியிருப்பதாலும் வேத விரோதம் ஸ்பஷ்டம்.

இந்த நாலு காரணங்களையும் ஒப்புக்கொண்டு ஸ்ரீ பாஞ்சராத்ரத்தில் விருத்த பாகங்களை ஸூத்ரகாரர் ப்ரதிக்ஷேபம் செய்தாரென்றே ஸ்ரீ சங்கராசாரியர் வ்யாக்யாநம் செய்திருக்கிறார். த்ரமிட பாஷ்யகார ரென்னும் நம் ஸித்தாந்தத்தின் ப்ராசீந ஆசார்யரும் இதை அப்யுகமம் செய்திருப்பதாய் ஆகம ப்ராமாண்யம் பூர்வபக்ஷ வசனத்தினால் தோன்றுகிறது. (ஆனால் ஸ்ரீ ஆளவந்தார் ஸாதிக்கிறபடி அது அங்வாருஹ்யவாதமா யிருக்கவேணும்) இந்த ஆக்ஷேபத்துக்கு ஸமாதானம்: ஆளவந்தார் தமது க்ரந்தத்தில் மேற்சொன்ன அதிகரணத்தில் இரண்டு ஸூத்ரம் பூர்வபக்ஷம் என்றும், மற்ற இரண்டும் ஸித்தாந்தம் என்றும் பஹுப்ரகாரமாய் நிர்ணயித்திருக்கிறார். ஸ்ரீ பாஷ்யகாரரும் இந்த அர்த்தங்களில் ஒன்றை ஸ்திரப்படுத்தி, ஸூத்ரக்காரருக்குப் பாஞ்சராத்ரம் ப்ரமாணந்தானென்றும், மஹாபாரதத்தில் இதை "மஹோபநிஷதம்" என்றும் "சதுர்வேதஸமந்விதம்" என்றும் சொல்லிவிட்டு, அவரே அதை ஸூத்ரத்தில் ப்ரதிக்ஷேபிப்பது அஸம்பாவிதமென்றும் அருளிச்செய்திருக்கிறார். மற்ற ஆக்ஷேபங்களுக்கும் ஸமாதானங்கள் ஆகம ப்ராமாண்யத்திலும் பாஞ்சராத்ர ரக்ஷையிலும் கண்டுகொள்வது.

6. **கால நிர்ணயம்.** இந்த சாஸ்த்ரம் வைஷ்ணவ மதத்துக்கு முக்கிய ஆதாரமாகையாலும் வேதங்களில் விஷ்ணுவைப் பரதைவமாகச் சொல்லும் வசநங்கள் அதிகமாயில்லை யாகையாலும், ஸ்ரீ க்ருஷ்ணன், பலராமன், முதலானவர்கள்தாம், பாஞ்சராத்ர ப்ரதிபாதிதர்களான வாஸுதேவ ஸங்கர்ஷணாதிகளாகையாலும் அவர்களுக்குப் பிறகு தான் இந்த சாஸ்தரம் உண்டாயிருக்க வேண்டும என்றும் பாப்சாத்ய வித்வான்கள் ஊஹிக்கிறார்கள். மேலும், ஸ்ரீ க்ருஷ்ணாதிகள் கலியுகாரம்பத்தில் இருந்தார்களென்னும் நம்முடைய ஸித்தாந்தத்தை மேற்சொன்னவர்கள் பல காரணங்களால் ஆக்ஷேபிக்கிறார்கள். அதாவது:—மஹாபாரதத்தில் துர்யோதந சிசுபாலாதிகள் ஸ்ரீ க்ருஷ்ணன் நாராயணாவதாரமென்

பதை ஆக்ஷேபித்திருப்பதாய்த் தெரிகிறபடியாலும், பதஞ்சலி மஹர்ஷியின் மஹா பாஷ்யத்தில் வாஸுதேவ பக்தர்கள் - சிலர், கம்ஸபக்தர்கள் சிலர் என்னும் இரண்டு கக்ஷிக்காரர்களை நிர்த்தேசித்திருப்பதாலும், மஹா பாஷ்யத்திலேயே "க்ருஷ்ணோ தேவ ஸுலாய:" என்று மாத்திரம் சொல்லி அவர்செய்த கம்ஸவதத்தை ப்ஸலாகித்துச் சொல்லாமலிருப்பதாலும், அக்காலத்தில் அதாவது—(150. B. C.) இரண்டாவது கிறிஸ்து பூர்வீகமான சதகாப்தத்தில் ஸ்ரீக்ருஷ்ணுதிகளின் அவதாரஸத்வம் ஒப்புக்கொள்ளப்படவில்லை யென்றும், கேவல ராஜாவான வஸுதேவர் பிள்ளையான க்ருஷ்ணனே அல்லது கோபால ஜாதியிற் பிறந்த கிருஷ்ணனே பிந்தி அவதார புருஷராய்க் கொள்ளப்பட்டாரென்றும், இதுதான் அவதாரங்களின் ப்ரவருத்திக்கு நிதாநமென்றும் அபிப்ராயப்படுகிறார்கள். சில ஸம்ஹிதைகளில் ஆழ்வார்களையும் மற்றும் சில ஸம்ஹிதைகளில் ஸ்ரீராமாநுஜாசார்யர் ஜநநத்தையும் சொல்லி இருப்பதால், இவைகள் க்ருஷ்ணுவதாரத்திற்குப் பிறகு எவ்வளவோ காலம் கழித்துத் தெற்கு தேசங்களில் விஷ்ணு புராண ஹரிவம்சாதி கதைகள் பரவ அவகாசம் வேண்டுமாகையாலும், புராணகாலமாகிய கிறிஸ்துவுக்கு அநந்தரமான (கி.பி. 400) 4-வது சதகத்துக்குப் பிந்தி - அதாவது 7,8-வது சதகங்களிலேதான் இந்த ஸம்ஹிதைகள் உண்டாயிருக்க வேண்டுமென்றும் ஊஹிக்கிறார்கள். இவர்கள் பூர்வபக்ஷ ஹேதுக்களை இங்கு விஸ்தரிக்க ஸாத்தியப்படாததால் ஸமாதானமும் விஸ்தாரமாய்ச் சொல்லக்கூடவில்லை. நாம் ஊஹிக்கக்கூடியது என்னவென்றால்:—

(1) மஹாபாரதத்துக்கு வெகுகாலம் முன்னால் இந்த தந்த்ரத்தின் ஸம்ஹிதைகள் இருந்திருக்க வேண்டும். இல்லாவிடில் அதில் இந்த ஸம்ஹிதை "மஹோபநிஷதம்" என்று சொல்லப்பட்டிருக்கமாட்டாது.

(2) வாஸுதேவ ஸங்கர்ஷணுதி வ்யூஹாவதாரங்கள் ஸ்ரீக்ருஷ்ணன் காலத்துக்கு முற்பட்டவைகள். அந்த அவதாரங்களை அநுஸரித்துப் பெயர்கள் உண்டாயிருக்கலாமே யொழியப் பெயர்களை அநுஸரித்து அவதாரங்களைக் கல்பித்தார்களென்பது சரியல்ல.

(3) க்ருஷ்ணன் காலத்திலேயே அவரை யறிந்த மஹான்கள், அவதாரமென்று பேசியிருப்பதால் சிலர் நிஷேதித்திருப்பதைக் கொண்டு அவதாரத்வம் கல்பிதமென்பது நாம் ஒப்புக்கொள்ளக் கூடியதில்லை.

(4) க்ருஷ்ணுவதாரமாய் இப்போது 5000 வருஷத்திற்கு மேலானது வாஸ்தவமானல், தீர்க்காயுளர்களான ஆழ்வார்கள் அவரைப் பிந்தி ஸ்துதி செய்வதானது ஆழ்வார்களை அதி நவீநரென்று சொல்லக் காரணமாகாது.

என்றிப்படி சில ஸமாதானங்களை நாம் சொல்லலாம். பூர்ணமாய் இந்த விஷயத்தை விமர்சம் செய்ய இந்த ஸங்க்ரகத்தில் அவகாசமில்லை.

7. பாஞ்ச ராத்ரத்தின் முக்ய ஸித்தாந்தங்கள்.

(1) வாஸுதேவன் பரதத்வம் : வாஸுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்நன், அநிருத்தன் என்று நான்கு ரூபங்களும் அவருடைய வ்யூஹாவதாரங்கள். கேசவன், நாராயணன் முதலாக இன்னும் பல வ்யூஹங்கள் உண்டு. இவர்களின் ஸ்வபாவங்களும் குணங்களும் ஏற்கெனவே வேதாந்ததீபிகையில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

(2) மேலே சொன்ன 4 விதமான ஸித்தாந்தங்களில் எந்த ஸித்தாந்தம் எந்தக் கோவிலிலே வழக்கமோ அந்த ஸம்ப்ரதாயத்தை மாற்றுமல் அனுஷ்டிக்கவேணும். ஸித்தாந்த ஸங்கரம் கூடாது.

(3) இந்த ஸித்தாந்தங்களில் சொல்லி இருக்கிறபடி ஸ்ரீ வைஷ்ணவர்கள் தாபம் அதாவது சங்க சக்ரங்களினல் அடையாளம் செய்து கொள்வது, புண்ட்ரம் என்கிற நெற்றி அடையாளங்கள், பகவானுக்கு தாஸன் என்று காட்டக்கூடிய பெயர், பகவத்த்யாநத்துக்கு உசிதமான மந்த்ரம் இவைகளை அனுஷ்டித்துத் தங்களை ஸம்ஸ்கரித்துக் கொள்ளவேண்டும். இந்த அடையாளங்கள் இல்லாதவர் வைஷ்ணவ ரல்லர்.

(4) பகவானை யடையச் சரணுகதியென்னும் மார்க்கமே முக்கியமானது. இது ஸ்த்ரீ சூத்ரர்கள் முதலான எல்லாருக்கும்

ஸாதாரணமான உபாயம். பகவானுடன் நித்யாநபாயிநீயாய் கருணாமயையாய் இருக்கும் ஸ்ரீ அல்லது லக்ஷ்மியைப் புருஷகாரமாகக்கொண்டு ஸ்ரீ ப்ரபத்தியைச்செய்து பிறகு பகவானை ப்ரபத்தி செய்ய வேணும்.

(5) ஸ்ரீ வைஷ்ணவர்கள் திநத்தை ஐந்து பாகமாய் விவரித்து, அபிகமநம், உபாதாநம், இஜ்யா, ஸ்வாத்யாயம், யோகங்களாகிற காலங்களில் க்ரமமாய் காலே பகவத் பூஜையையும் பிறகு அதற்கு அநுகூலமான த்ரவ்யார்ஜநத்தையும், பிறகு மத்யாந்ஹாராதநத்தையும், பிறகு வேதாந்தம் முதலான சாஸ்திரப்பயிற்சியையும் ராத்திரி போஜநத்துக்குப்பிறகு பகவத்த்யாநமாகிய யோகத்தையும் செய்யவேணும். இப்படிச் செய்தால் அவர்கள் பஞ்சகால பராயணர்களாகிறார்கள். இது முக்யமான வைஷ்ணவ தர்மம்.

8. இப்படி ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு வேதோக்தமானவும் ஸ்மார்த்தமானவுமாயிருக்கிற நித்ய நைமித்திகங்களுக்கு விரோதமில்லாமல் சில விசேஷ தர்மங்களையும் இந்த சாஸ்திரம் போதிக்கிறது. அது அநுஷ்டாநத்துக்கு வந்திருப்பதுடன் வீண்காலம் போகாமல் நல்ல விஷயங்களில் அதாவது பகவானின் த்யாநத்தில் நம் காலத்தைச் செலவழிக்க வழிகாட்டி இருப்பதால் இது ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு மிகவும் உபாதேயமான முக்யமான சாஸ்திரம். இதை நன்றாய் அறிந்து அநுஷ்டிப்பது எல்லா வைஷ்ணவர்களுக்கும் ஆவச்யகம்.

டி. ராஜகோபாலாசார்யர்.

# ஸ்ரீ அஹோபிலமும்

## இரண்டு கந்தர்வர்களும்.

(தொடர்ச்சி.)

அப்போது மதுராலாபன் “ஓ! மித்ரனே! இதோ ஓர் நதி ப்ரவஹிக்கின்றது பார். இது தான் பவநாஶிநீ. இதில் ராத்ரி மழையினுல் ப்ரவாஹம் விஞ்சிவிட்டது. ஆகையால் இதைத் தாண்ட முடியாமல் இரண்டு கரைகளிலும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் நூற்றுக் கணக்காய் நிற்கிறுர்கள் பார். இங்கு சற்று நிற்போம். இதோ கொஞ்சம் ஜலம் வடிந்தது. இவ்விடத்தில் சிலர் தைர்யமாய் வெள்ளத்தில் இறங்கி ஒரு பக்கத்தில் வழியைக் கண்டு பிடித்தார்கள். சிலர் வெள்ளத்திற்குப் பயந்து திரும்பிவிட்டார்கள். சிலர் பரஸ்பர உத்த ஹஸ்தாவலம்பர்களாய்க் கரை சேர்ந்தார்கள். நாம் இனி மேலே செல்வோம். இதோ பவநாஶிநியின் கரையில் மார்க்கத்திற்கு ஸமீபத்திலேயே ஓர் ஸந்நிதி தெரிகின்றது பார். இது “[illegible] ।” என்று சொல்லப்பட்ட காரஞ்ச ந்ருஸிஹ்மன் ஸந்நிதி. இதோ ஶார்ங்கத்தோடும் சக்ரத்தோடும் வீற்றிருக்கும் காரஞ்ச ந்ருஸிஹ்மனே ஸேவி. ஓர் காலத்தில் துர்வாஸஸ்ஸின் ஶாபத்தால் ஜ்ஞாநத்தை இழந்த ஶோபிலர் இங்கு மந்த்ரராஜனே ஜபித்து ந்ருஸிஹ்மாநுக்ரஹத்தால் ஸர்வஜ்ஞரானு ரென்று இப்புராணத்தில் ப்ரஸித்தம். இதோ ஸுமார் ஒரு மைலுக்குள் தெரிகிற ஸந்நிதியைப் பார். இதுதான் அஹோபில ந்ருஸிஹ்மன் ஸந்நிதி. இங்குள்ள பவநாஶிநீயின் குண்டத்தைக் ‘கஜதீர்த்தம்’ என்று புராணம் கூறுகிறது. இங்கு இறங்கி மண்டபங்களால் அலங்கரிக்கப்பட்ட குஹையிலுள்ள அஹோபில ந்ருஸிஹ்மனே ஸேவிப்போம் வா. இதோ சக்ராகாரமாய் மேலே மலை நீரின் கீழ் ஓர் மேடையில் த்விபுஜனுய் ஹிரண்ய கஶிபுவின் ஸம்ஹாரத் திருக்கோலத்துடன் ஸேவை ஸா

திப்பதைப் பார். இவர் திருவடிகளில் ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்யக் கருது. இவர்தான் ஒன்பது பேர்களிலும் ப்ரதானர் என்று "ஜகம் தத் ஸ்வயஃஸ்லாநம் ஸ்ருஹ்ருதி ஸிரஸாவஸிதம் । ஸ்லாநாந் ந்யாநிஸேஷ்வ ।" இத்யாதிகளில் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு ஆச்சர்யம் பார். இந்த ஜனங்கள் ஆற்றின் வெள்ளத்தால் தாமஸித்து வர இக்கோயில் அர்ச்சகர் 'நான் ப்ரஸாதத்தை ஸ்வீகரித்துவிட்டேன். இனி ஸந்நிதிக்கு வரமுடியாது. நீங்களே உபஹாரம் ஸமர்ப்பித்து ஸேவியுங்கோள்' என்று நியமிக்க, இங்குள்ள பாகவதர்களும் அந்நியமனத்தை அங்கீகரித்து, எல்லாரும் ஒருமுகமாய் இந்த வ்யக்தியைத் தத்கால கைங்கர்யத்தைப் பண்ணும்படி நியமித்தார்கள். இவரும் அர்ச்சக முகத்தாலே ந்ருஸிம்ஹனே நியமிப்பதாக எண்ணி, பாகவத நியமனத்தைச் சிரஸா வஹித்து 'அகலிலகலு மணுகிலணுகும்' என்னும் திவ்யஸூக்தியை மனஸ்ஸால் நினைத்து, 'விதிவாய்கின்ற காப்பார்' என்று ஸந்தோஷத்துடன் உபஹாராதிகளை ஸமர்ப்பிக்கின்றார் பார். இவர் துண்டீர மண்டலத்தில் ஷஷ்டபராங்குச ஸ்வாமியால் ப்ரதிஷ்டிதமான 'இஞ்சிமேடு' என்கிற அக்ரஹாரத்தில் ஜனித்தவர். இவருடைய ஜ்ஞாதிகளில் ஒருமஹான் முன்பு இந்த அஹோபிலஸ்தானத்தை அலங்கரித்திருந்தார். அவருக்கு 'அத்திப்பட்டு ஶடகோப ராமாநுஜ ஸ்வாமி' என்று திருநாமம். இவர் ராமாநுஜ ஸித்தாந்தத்தில் சிறந்த ஜ்ஞானமுடையவர். ஸ்ரீமுஷ்ணத்தில் அவதரித்த ஸ்ரீமத் ஸ்வர்ணம் ஸ்வாமி திருவடிகளையே ஸர்வ ப்ரகாரத்தாலும் உத்தாரகமாக நினைத்தவர். இவர் க்ஷண காலமாவது இந்த ந்ருஸிம்ஹனை நிருபாதிகமாக ஆராதித்ததற்கு இவருடைய ஜன்மாந்தர ஸுக்ருதமே காரணம்.

இதோ ஒரு சிறிய ஸந்நிதி தெரிகிறது பார். ருத்ரனுக்குப் பகவான் வரமளித்த இடம் இது. இதில் லிங்கமும் உக்ர ந்ருஸிம்ஹனும் இருக்கின்றார்கள் பார். இதோ ஒரு குஹை மூடப்பட்டிருக்கிறது. இதன் வழியால் அஹோபில மடத்தின் ஆறாவது ஜீயர் சென்று அங்கு எழுந்தருளியிருக்கும் பகவானோடு ஐக்யமாயினராம். ஆகையால், இது அதுமுதல் மூடப்பட்டிருக்கிறது. இனி ஸந்நிதிக்கு வெளியில் செல்வோம். இங்குநின்று பயங்கரமான காடுகளையும் அரை மைல் உயரத்திலிருந்து ஶிவன் தலை

மேல் தான் குதித்த தேவகங்கை போன்ற மலையருவிகளின் வைசித்ர்யத்தையும் இரண்டு பக்கத்திலுமுள்ள மலைகளின் அழகையும் பார். இந்த ஸந்நிதி இருக்குமிடம் தான் கருடாசலம். இந்த ஸ்தலத்தின் ஊராவமாஹாத்மயத்தை நினைத்தே 'தெய்வமல்லாற் செல்லவொண்ணு' என்றும், 'சென்றுகாண்டற் கரியகோயில்' என்றும், 'நினைத்தனையும் சொல்லவொண்ணுச் சிங்கவேழ்குன்றமே' என்றும் கலியன் அருளினர்.

இதோ இடது புறத்தில் ப்ருஹ்மவித் ஸங்கம் நிறைந்த தொருமலை தெரிகின்றது பார். இதற்கு 'வேதாத்ரி' என்று பெயர். முன் க்ருத யுகத்தில் ஸோமகன் என்னும் அஸுரன் ப்ருஹ்மாவினிடத்திலிருந்து வேதங்களை அபஹரித்துப்போனன். பின்பு பகவான் அவனைக் கொன்று வேதங்களை மீட்டு ப்ருஹ்மாவுக்குக் கொடுத்தான். பிறகு வேதங்கள் ப்ருஹ்மாவினிடத்தில் தங்களுக்கு அடிக்கடி நேரும் விபத்தைத் தீர்த்துக்கொள்ள இம்மலையில் வந்து பகவானைக் குறித்துத் தபஸ் செய்ய பகவானும் ப்ரஸந்நராய் வேதங்களின் அபீஷ்டங்களைக் கொடுத்து "𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌹𑍃𑌤𑌿 𑌯𑍋 𑌕𑍋𑌽𑌯𑌂 𑌯𑍁𑌷𑍍𑌮𑌾𑌨𑍍 𑌅𑌨𑌨𑍍𑌤𑌂 𑌭𑌵𑌤𑍍𑌵𑌿𑌤𑌂। 𑌵𑌸𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌨 𑌸𑌨𑍍𑌦𑍇𑌹𑌃" என்று சொல்லி மறைந்துவிட்டார். அதுமுதல் இதற்கு 'வேதாத்ரி' என்று பெயர் வந்தது. இதன் ஶிகரத்தை 'லக்ஷ்மீக்ஷேத்ர மென்றும், இங்கு லக்ஷ்மீ ந்ருஸிஹ்மன் எழுந்தருளியிருக்கிருர் என்றும் '𑌵𑍇𑌦𑌾𑌦𑍍𑌰𑍌 𑌶𑍍𑌰𑍀𑌵𑌰𑌾𑌹𑌸𑍍𑌯 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌂। 𑌤𑌤𑍍𑌰 𑌹𑍇𑌮𑌵𑌾𑌨𑍁 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌨𑍃𑌕𑍇𑌸𑌰𑍀' என்கிற புராணஶ்லோகம் சொல்லுகிறது. அங்கு சென்று பகவானைத் தொழுவோம் வா. இவர் தான் அஹோபிலமடத்தில் எழுந்தருளி யிருக்கும் லக்ஷ்மீந்ருஸிஹ்மனுக்கு மூல பேரம். இவருக்கு முன்னிருக்கும் பீடத்தில் தான் முன்பு உத்ஸவர் எழுந்தருளியிருந்தார். இந்த அஹோபிலம் ஜீயர் தம் மடத்து லக்ஷ்மீ ந்ருஸிஹ்மனை இரண்டு மாதத்திற்கு முன் இந்தப் பீடத்தில் எழுந்தருளப்பண்ணி அபிஷமாராதநம் செய்தருளினராம்" என்ருன்.

அப்பொழுது வல்குபாஷணன் "ஓ! நண்பனே! இந்தஜீயர் இங்கு எழுந்தருளப்பண்ணி அபிகமநாராதநம் செய்தருளினதாகச் சொன்ன லக்ஷ்மீ ந்ருஸிஹ்மன் இவருடைய அர்ச்சாபேரமன்ருே? இவர் இந்த மூலஸ்தாநத்தைவிட்டு வெகுகாலம் விதேசத்

தில் எழுந்தருளியிருப்பது கூடுமோ? பலிஹோமாதிகளில்லாமல் வேகு காலம் பிரிந்திருந்தால் பகவத் ஸாந்நித்யம் விஶேஷித்திருக்குமோ? இப்படி இருப்பது ஶாஸ்த்ரத்திற்காவது இதர திவ்ய தேசங்களின் அநுஷ்டாநத்திற்காவது பொருந்துமோ வென்கிற ஸம்ஶயத்தினால் என்மனம் கலங்கியிருக்கிறது. ப்ருஹ்மஜ்ஞனான நீ இந்த ஸம்ஶயத்தைத் தீர்த்து என்மனத்தைத் தெளியச் செய்ய வேண்டும்.” என்று வினவ, மதுராலாபனும் “ஓ! மித்ரனே! நீ ஸம்ஶயித்த விஷயம் ந்யாயமே. அதற்குப் பெரியோர்களால் நான் கேட்டிருக்கும் ஸமாதாநத்தைச் சொல்லுகிறேன் கேள். அதாவது - உத்ஸவபேரம் மூல பேரத்திற்கு இவ்வளவு ஸமீபத்தில்தான் இருக்கவேண்டுமென்றும், இத்தனைநாள் பிரியலாமென்றும், அதற்குமேல் கூடாதென்றும் நியமிக்கிற ப்ரமாணம் புலப்படவில்லை. அப்படி புலப்பட்டாலும் அவைகளெல்லாம் ‘ஶாந்த தோஷ’ விஷயமேயொழிய ஸ்வயம் வ்யக்தாதிகளில் பாதகமாக மாட்டாது. அப்படி பாதகமாகுமாகில் ஸ்ரீ முஷ்ணஹீந்த்ர புராதி திவ்ய தேசங்களில் சில நாள் பிரிந்திருப்பதும் பாதகமாகும். கலாப காலங்களில் திருநாராயணனைவிட்டு டெல்லியில் செல்வப்பிள்ளையும், வரதனைப்பிரிந்து உடையார் பாளையத்தில் தேவப் பெருமாளும், ஸ்ரீரங்கத்தைவிட்டு செஞ்சி முதலான இடங்களில் ரங்கநாதனும் வெகுகாலம் எழுந்தருளியிருந்தார்களெனச் செவியுற்றிருக்கிறோமல்லவா? இந்த விஷயத்தை மானிடம் பாடாத கவியான ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன், ரங்கநாதனைச் செஞ்சியிலிருந்து மறுபடி ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளப்பண்ணின கோபண்ணராயன் நாமாங்கிதமான “𑌆𑌨𑍀𑌯𑌾𑌨𑍀𑌲 𑌶𑍃𑌂𑌗𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌰𑌚𑌿𑌤 𑌜𑌗𑌦𑍍𑌰𑌂𑌜𑌨𑌾𑌦𑌂𑌜𑌨𑌾𑌦𑍍𑌰𑍇𑌶𑍍 𑌚𑍇𑌂𑌜𑍍𑌯𑌾𑌮𑌾𑌰𑌾𑌧𑍍𑌯 𑌕𑌂𑌚𑌿𑌤𑍍 𑌸𑌮𑌯 𑌮𑌥 𑌨𑌿𑌹𑌤𑍍𑌯𑍋𑌦𑍍𑌧𑌨𑍁𑌷𑍍𑌕𑌾𑌨𑍍 𑌤𑍁𑌰𑍁𑌷𑍍𑌕𑌾𑌨𑍍 । 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌭𑍍𑌯𑌾 𑌮𑍁𑌭𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌸𑌹 𑌨𑌿𑌜𑌨𑌿𑌲𑌯𑍇 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑌨𑍍 𑌰𑌂𑌗𑌨𑌾𑌥𑌂 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌵𑌰𑍍𑌯𑌾𑌂 𑌸𑌪𑌰𑍍𑌯𑌾𑌂 𑌪𑍁𑌨𑌰𑌕𑍃𑌤 𑌯𑌶𑍋𑌦𑌰𑍍𑌪𑌣𑍋 𑌗𑍋𑌪𑍍𑌪𑌣𑌾𑌰𑍍𑌯𑌃” என்கிற ஶ்லோகத்திலும் அருளிச் செய்திருக்கிறானன்றோ? அப்படிப் பிரிந்திருந்த காலங்களிலும் அந்தந்த அர்ச்சா பேரங்களில் ஶரண்ய ஸாந்நித்யம் பூர்ணமாய் இருந்ததென்பதற்கு, உடையவர் டெல்லிக்கு எழுந்தருளி ‘செல்வப்பிள்ளையைக் கொடுக்க வேண்டு’மென்று அந்த ராஜாவைக்கேட்க, ராஜாவும், ‘உம்முடைய பெருமாளை

நீர்பார்த்து எடுத்துக்கொள்ளும்' என, உடையவரும் ராமப்ரிய ரைக்கண்டு, எல்லாரும் காணும்படி பொற்சதங்கை ஶப்திக்கக் குதித்து உடையவர் மடியிலே எழுந்தருளியிருக்க, உடையவரும் 'என்னுடைய செல்வப் பிள்ளையோ! வென்று எடுத்து அணைத் துக்கொண்டருளினர்' என்கிற ஸ்ரீ த்ரிதீய பரகாலஜீயர் குரு பரம்பராவாக்யமும் பெரியோர்களின் நல்வார்த்தையுமே ப்ரமா ணம். அவை விபத்தினால் நேர்ந்த பிரிவுகள். இதுவிலக்ஷணப்ரை ஷோபதேசத்தால் ஆசார்யனாய் நின்ற பகவந்நியமநத்தால் வந்த பிரிவு. காஞ்ச்யாதி மஹாதிவ்ய தேசங்களிலும் அப்ரத்தையால் வந்த ஹோமாதிலோபங்கள் பாதகாவஹமன்னாகில், இங்கு பிரிவி னால் யாத்ராஷோத்திற்கு மாத்திர முண்டான பலிஹோமாதிக ளின் அநந்வயம் பாதகாவஹமாகுமோ? ப்ரத்யக்ஷ ஶ்ருதிபோலே பகவந் நியமநமும் நிரபேக்ஷ ப்ரமாணதமமென்று இதைஸ்ரீஷஷ்ட பராங்குச ஜீயர் பர்யந்தமுள்ள ஸகல மஹாந்களும் ஆதரித்து வந்தார்கள். பின்புள்ள கலக்கங்கள் வைஷம்யத்தாலும் புராணாத்ய பரிஶீலநத்தாலும் ஸ்வயம் வ்யக்தாதி ப்ரபாவம் சொல்லும் பாஞ்ச ராத்ர க்ரந்தா வேக்ஷநத்தாலும் வந்தன வாகையால், அவை மஹாந் களுக்கு ஹ்ருதயங்கமங்களன்று. ஆகையால் இனி நீ இதில் ஸம் ஶயிக்க வேண்டிய தொன்றுமில்லை" என்றான்.

அதன்மேல் இருவரும் மண்டபத்தில் செல்லுகையில் மதுரா லாபன் வல்கு பாஷணனைப்பார்த்து ஓ! நண்ப! இதோ இம்மண் டபத்தில் ஒருஶிலையில் சுஞ்சு லக்ஷ்மீயின் பரிணயத்தாலே கோபத் துடன் முகத்தைத் திருப்பிக்கொண்டு ஒதுங்கி நிற்கும் லக்ஷ்மியை ந்ருஸிம்ஹன் அநுநயம் பண்ணுகிறார் பார். இதோ அருகிலிருப் பது தான் சுஞ்சுமலை. இந்தக் குஹையின் வழியால் தான் சுஞ்சு லக்ஷ்மீ இவ்விடம் வந்துசேர்ந்தாள். வேதாத்ரியின் மேற்குப் பாகத்தில் "வாராஹம் ரூபமாஸ்தாய யத்ரஜாதம் வஸுந்தரா। வேதாத்ரௌ வ்யோமஹோமேதத்" என்று சொல்லப்படும் மண்மகள் கேள்வனான வராஹ ந்ருஸிம்ஹன் ஸந்நிதி. இது அஹோபில ந்ரு ஸிம்ஹன் ஸந்நிதிக்கும் லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸந்நிதிக்கும் மத்ய மார்க்கத்தி லிருக்கிறது. இந்த 'காரஞ்ஜம் ஹோவிமு க்ரோடய ...மஹோஜ்வலர்களுடைய ஸந்நிதிகள் நான்கும் சுமார் இரண்டு மைலு

க்குட்பட்டன. இதோ க்ரோஶ மாத்ர தூரத்தில் கருடாசல வேதாசல மத்தியில் 'அசலச்சாய மேரு' வென்று ஓர் பர்வதம்தெரிகின்றது பார். இதன் மத்தியில் 'ஜ்வாலா ந்ருஸிம்ஹன்' ஸந்நிதி இருக்கிறது. இந்த ந்ருஸிம்ஹன் விஷயம் தான் '[illegible]' என்கிற புராண ஶ்லோகமும் '[illegible]' என்ற கூரேஶ ஸூக்தியும். இவருடைய ஜ்வாலையின் ஶமநார்த்தமாகத் தேவதைகள் கங்கையினால் இவரை ஸ்நாநம் பண்ணிவைத்தார்கள். அது தான் பவநாஶிநியாக ப்ரவஹிக்கிறது என்பதை "[illegible]" என்கிற ஶ்லோகங்கள் ப்ரதிபாதிக்கின்றன. இப்பொழுது இந்த க்ஷேத்ரம் இந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸங்கத்திற்கு ஸுகமமன்று. விமாந காமிகளான நமக்கு ஸர்வஸ்தாநமும் ஸுகமமாச்சுது.

இதோ கருட நதிக்குத் தெற்கில் பாவந தீர்த்தக் கரையில் பாவந ந்ருஸிம்ஹன் ஸந்நிதியைப் பார். இவர் ஆஶ்ரிதர்களுக்கு அபீஷ்டத்தைக் கொடுப்பவர் என்று "[illegible]" என்கிற ஶ்லோகத்தினால் ஸ்துதிக்கப்பட்டவர். இப்பொதும் இங்கு ஜநங்களின் ப்ரார்த்தனை அதிகமாக நிறைவேறுகின்றது.

இதோ ஒரு மலை இரண்டாக வெடித்ததுபோல் உந்நதமாகத் தெரிகின்றதே! இதற்கு 'உக்ரஸ்தம்பம்' என்று பெயர். இதன் மத்தியில் அவதார வேஷத்தோடு நிற்கும் ந்ருஸிம்ஹனை ஸேவி.

இந்த ந்ருஸிம்ஹனைத் தான் "க்ஷீராப்திஶயநோ தேவ: ஸ்தம்பே ஹரிஸ்ஸ்வயம் । ஜ்வாலாகார ந்ருஸிம்ஹோய ஸ்தம்பாத்ஸம்பவ: ॥" என்கிற ஶ்லோகம் சொல்லுகிறது. இது ஹிரண்ய கஶிபுவின் க்ருஹ ஸ்தம்பத்தில் அவதரித்தபடி. இங்குத் தபம் புரிந்த பக்தர்களுக்குத் தோன்றிய ப்ரகாரம் ஹிரண்யகஶிபுவின் நகரமேஇதென்றும் அவன் க்ருஹஸ்தம்பம் காலேந பர்வதமாகப் பரிணமித்ததென்றும் புராணமும் மஹான்களும் கூறுவர். அதற்கும் நாம் கீழ்ச்சொன்னபடியே தாத்பர்யம். 'பஞ்சாப்' என்னும் பாஞ்சால நகரத்தில் 'ஹிரண்யபுரம்' என்றும் அங்கு அவதரித்த ஸ்தம்பம் இருக்கிறதென்றும் சில மஹான்கள் சொல்கிறார்கள். அவதரித்துச் சிரகாலமானதால் நமக்குத் தேச நிஶ்சயம் உண்டாவது அரிது. இந்த அர்ச்சா ஸமாதியில் நவந்ருஸிம்ஹர்களையும் ஸேவித்ததாலும் ஸம்ப்ரோக்ஷணோத்ஸவ தர்சநத்தாலும் நம்முடைய ஜந்மம்க்ருதார்த்தமாய்விட்டது. இனி இந்த குதூஹலத்தோடே 'பஞ்சாப்' தேசம் போய் அங்குள்ள நவந்ருஸிம்ஹர்களையும் ஸேவித்து க்ருதார்த்தர்களாய் நம் ஹிமயமலைக்குச் செல்வோம்" என்றுசொல்லிக்கொண்டே விமாநத்துடன் ஆகாஶமார்க்கத்தில் சென்றார்கள்.

அஹோபில யாத்ரை செய்த பௌராணிகன்.

𑌶𑍍𑌰𑍀𑌃.

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌯 𑌨𑌮𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃

# ஸ்ரீ விஷ்ணுபக்தியில்லாதவனுக்கு

## ப்ரஹ்ம வித்யோபதேஶாநர்ஹத்வ ப்ரகடநம்.

𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 [illegible] 𑌪𑌾𑌦𑌾𑌮𑍍𑌭𑍋𑌜𑌂 𑌕𑍍𑌷𑌾𑌲𑌯𑌤𑍁
𑌤𑌤𑍍𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌵𑌹𑌤𑍁 [illegible]
[illegible] ॥

ப்ரதமோபந்யாஸத்திலே கௌதமோக்தங்களான எட்டு ஆத்ம குணங்களை யுடையவனுக்கு ப்ருஹ்ம வித்யை உபதேசித்தல் ஸதாசார்ய க்ருத்யமென்று சொல்லப்பட்டிருக்கிறது. மீமாம்ஸா ந்யாயங்களோடுகூடின வேதாந்தார்த்தங்களை உபதேசித்தல் ப்ருஹ்ம வித்யோபதேசமென்று சொல்லப்படும். அந்த வேதாந்தார்த்தங்கள் எவையென்றால், ப்ராப்யனான பரமாத்மாவினுடைய ஸ்வரூப குணங்களும் ப்ராப்தாவான ஜீவாத்மாவின் ஸ்வரூப குணங்களும், பரமாத்ம ப்ராப்த்யுபாயமும், ப்ராப்திரூப பலமும், ப்ராப்தி விரோதியும். இவைகளே 'அர்த்தபஞ்சகங்கள்' என்று சொல்லப்படும். இந்த அர்த்தத்தை "𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌰𑍂𑌪𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍁𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 । 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌯𑌂 𑌫𑌲𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇𑌸𑍍𑌤𑌥𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌵𑌿𑌰𑍋𑌧𑌿 𑌚 ॥ 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌸𑌕𑌲𑌾 𑌵𑍇𑌦𑌾𑌃 𑌸𑍇𑌤𑌿𑌹𑌾𑌸𑌪𑍁𑌰𑌾𑌣𑌕𑌾𑌃 । "என்று ஸங்க்ரஹித்தார்கள். இப்

படிப்பட்ட ப்ருஹ்ம வித்யையானது விஷ்ணுத்வேஷ முடையவனிடத்தில், கௌதமோக்தங்களான எட்டு ஆத்ம குணங்களும் பூர்ணமாயிருந்தால் அவனுக்கு உபதேசிக்கக்கூடுமோ? கூடாதோ? என்கிற ஶங்கையில் இந்த உபந்யாஸம் ஆரம்பிக்கப்படுகிறது. பூர்வோபந்யாஸத்தில் 'ஸம்ஸ்ருஸ்வத்வெஸஹாதிஃ' என்னும் ஶ்லோகத்திலே விஷ்ணுவினிடத்தில் அத்வேஷமும் ஆசார்ய ஸம்பந்தத்துக்குக் காரணமென்று சொல்லி யிருக்கிறபடியால், விஷ்ணு த்வேஷத்தை யுடையவனுக்கு ஆசார்ய ஸம்பந்தமே கடிக்கமாட்டாதபடியால் அவனுக்கு ப்ரஹ்மவித்யோபதேச ஶங்கைக்கு ப்ரஸக்தியே இல்லை யாகையால், இந்த உபந்யாஸத்துக்கு நிஷ்ப்ரயோஜநத்வம் ப்ரஸங்கிக்குமென்னில், இது ப்ரஸங்கியாது. எங்ஙனே யென்னில்: விஷ்ணுத்வேஷத்தை யுடையவனுக்கு ஶாஸ்த்ரத்தாலே ஆசார்ய ஸம்பந்த யோக்யதை இல்லாவிட்டாலும், அத்வேஷ பாவநயா ஶிஷ்யனாகவந்த இவனுக்கு ஆசார்யன், ஸாதுத்வ ப்ரமத்தாலே ப்ருஹ்ம வித்யை உபதேசிக்கிறது ஸம்பவிக்கலா மாகையாலே அந்த ஆசார்யோபதிஷ்டமான ப்ருஹ்மவித்யையானது இவனிடத்தில் ஸபலமாமோ? விபலமாமோ? என்கிற சங்கை உதிக்கிலாமிறே. ஆகையால் இந்த உபந்யாஸாரம்பம் ஸப்ரயோஜனம்.

'யமெஷ்வெதெ வஸ்வாரிம்ஶத்ஸம்ஸ்காரா நவாஷ்டாவாத்மகுணா நவஸ்ய ஹஹ்மணஸ்ஸாயுஜ்யம் ஸாலோக்யஞ்ச கச்சதி' என்கிற கௌதம ஸூத்ரத்தாலே ஆத்மகுணங்கள் இல்லாவிட்டால் ப்ருஹ்ம ப்ராப்தி இல்லை யென்கிற வ்யதிரேகோக்தியாலே ஆத்ம குணங்களுக்கு ப்ருஹ்ம ப்ராப்தி ஸாதநத்வம் த்ருடீக்ருதமாயிற்று. ஆகையாலே இந்த ஆத்மகுணங்களை யுடையவனிடத்தில் விஷ்ணுத்வேஷ மிருந்தாலும் ப்ருஹ்ம ப்ராப்த்யுபாயமான ப்ருஹ்ம வித்யையை உபதேசித்தால் இந்த ப்ருஹ்ம வித்யாபலத்தாலே பின்பு இவனுக்கு கண்டாகர்ணதிகளுக்குப்போலவே விஷ்ணுத்வேஷம் நிவ்ருத்தமாகலாமாகையாலே விஷ்ணு த்வேஷத்தை யுடையவனுக்கு கௌதமோக்தங்களான தயை, க்ஷாந்தி, அந

ஸூயை, ஶௌசம், அநாயாஸம், மங்களம், அகார்ப்பண்யம், அஸ்ப்ருஹை என்னும் எட்டு ஆத்மகுண பூர்த்தி இருந்தால் ப்ருஹ்ம வித்யோபதேசத்துக்குத் தடையுண்டோ வென்னில், 'விஷ்ணுபக்திபரோ தைவோ விபரீதஸ்ததாஸுர:' இத்யாதி ப்ராமணங்களிலே விஷ்ணு பக்திபரனை 'தெய்வப்ரக்ருதி' என்றும், விஷ்ணு த்வேஷபரனை 'ஆஸுரப்ரக்ருதி' என்றும் சொல்லுகிறபடியாலே ஸம்ஸார பந்தார்ஹனுன இவ்வாஸுர ப்ரக்ருதிக்கு மோக்ஷஸாதநமான ப்ருஹ்ம வித்யையை உபதேசிக்கலாகாது.

இவ்வாஸுர ப்ரக்ருதிக்கு ஸம்ஸார பந்தார்ஹத்வமானது 'தைவீ ஸம்பத் விமோக்ஷாய நிபந்தாயாஸுரீ மதா ।' என்கிற ஸ்ரீ கீதா ஷோடஶாத்யாய ஶ்லோகத்திலே விஷ்ண்வாஜ்ஞாநுவர்த்தநரூபமான தைய்வ ஸம்பத்தானது மோக்ஷ ஹேதுவென்றும் விஷ்ண்வாஜ்ஞாதி லங்கநரூபமான ஆஸுர ஸம்பத்தானது ஸம்ஸாரபந்த ஹேதுவென்றும் சொல்லியிருக்கிறபடியாலே ஸித்தம். இந்த ஆஸுரப்ரக்ருதிக்கு ஸாதுத்வ ப்ரமத்தாலே ஆசார்யன் ப்ருஹ்ம வித்யை உபதேசித்தாலும் இந்த ப்ருஹ்மவித்யை ஊஷர க்ஷேத்ரத்திலே உப்தமான பீஜம்போலே வ்யர்த்தமாய் விடும். இந்த அர்த்தமானது 'ஊஷரே நிவபேத்பீஜம் ஷண்டே கந்யாம் ப்ரயோஜயேத் । ஸ்ரஜம் வாநரகண்டே ச நாபாத்ரே ஶாஸ்த்ரம் ப்ரயோஜயேத் ॥' இத்யாதி மஹர்ஷி வாக்யங்களாலே ஸித்தம். [ஊஷர க்ஷேத்ரத்திலே பீஜாவாபமாவது செய்யலாம்; நபும்ஸகனுக்கு கந்யாதாநமாவது செய்யலாம்; குரங்குக்கு மாலாதாநமாவது செய்யலாம்; அபாத்ரத்திலே ஶாஸ்த்ரதாநம் செய்யலாகாது என்பது இந்த ஶ்லோகார்த்தம்.] தவிரவும், ஆஸுர ப்ரக்ருதிக்கு ப்ருஹ்மவித்யை உபதேசித்தால் இவன் இதனாலே வரம்பெற்ற ராவணுதிகளைப்போலே உத்வ்ருத்தனாய் வேதாந்த ஜ்ஞாந துர்ப்பலர்களான ஸாதுக்களுக்குத் தன் துர்வாதங்களாலே புத்தி வ்யாமோஹத்தை உண்டாக்கத்தக்கவனாகைபாலே, இந்த உபதேசம் பஹ்வநர்த்தாவஹமாயிருக்கும். 'நித்யாநுஷங்கா ந

தா நயந்யாத்ர ஜ்ஞாநதீபேந பாஸ்வதா । வாஸுதேவே ஷஸ்த்ர வேதா யத்நாதிவிவக்ஷணாத் ॥' என்று ஸ்ரீ மஹாபாரதத்திலே வேதாந்த ஜ்ஞாந துர்ப்பலர்களான ஸாதுக்களுடைய வ்யாமோஹநமானது மஹா பாதகமாயிறே சொல்லப்பட்டிருக்கிறது.

'ஶ்ரேயஸ்ஸம் ஸஸ்த்ராஸ்த்ராணி விஹிதாநி ஶநீஷிபி: ॥'

இத்யாதி ப்ரமாணங்களிலே ஸர்வ ஶாஸ்த்ரங்களுக்கும் குணவஹத்வம் ஸ்வபாவமாகச் சொல்லியிருக்க, ஆஸுர ப்ரக்ருதிக்கு உபதேசித்த ப்ருஹ்ம வித்யைக்கு இப்படி தோஷாவஹத்வம் ஸம்பவிக்குமோ வென்னில்: மாதுர்யாதி ஸ்வபாவத்தையுடைய க்ஷீரத்துக்கு ஸர்ப்பத்தினிடத்தில் விநியோகத்தாலே விஷரூபேண பரிணமம் உண்டாகிறதுபோல இந்த ப்ருஹ்ம வித்யைக்கு ஆஶ்ரயதோஷத்தாலே தோஷாவஹத்வம் ஸம்பவிக்கலாம். இந்த அர்த்தத்தில் 'நமாம் து꞉ஷ்க்ருதிநோ மூடா꞉ ப்ரபத்யந்தே நராதமா꞉ । மாயயாபஹ்ருதஜ்ஞாநா ஆஸுரம் பாவமாஶ்ரிதா꞉ ॥' என்கிற ஸ்ரீ கீதா ஶ்லோகத்தை ப்ரமாணமாகத் தெரிந்துகொள்வது. [என்னைச் சரணமடையாத துஷ்க்ருதிகள், மூடர்களென்றும் நராதமர்களென்றும் மாயயாபஹ்ருத ஜ்ஞாநர்களென்றும் ஆஸுர பாவாஶ்ரிதர்களென்றும் நான்குவகையாக இருப்பார்கள். அவர்களில் ஈஶ்வரஜ்ஞாந மில்லாதபடியினாலே ததீயமான ஸ்வரூபத்திலும் ஸ்வ போக்யமான க்ருஹ க்ஷேத்ராதி வர்க்கத்திலும் ஸ்வகீயத்வஜ்ஞாநத்தை யுடையவர்கள் மூடர்கள். இதிஹாஸ புராணாதிகளாலே ஈஶ்வர ஜ்ஞாநம் பிறந்தாலும் அவனுடைய ஸௌலப்ய குணத்தை அறியாதபடியாலே அவனிடத்தில் ஆபிமுக்யத்தை அடையாதவர்கள் நராதமர்கள். 'ஹஸந்தி ஜ்ஞாயமாநாஸ்த்வாம் மநுஷ்யம் நராதமா꞉ । பஶவோ மநுஷ்யோ ஜந்தூம் பாபிஷ்டா꞉ ॥' என்று மஹர்ஷிகளும் சொன்னார்களிறே. (விஷ்ணுவினுடைய பரத்வ குணமாத்ரத்தை யறிந்து அவனைத் துர்லப புத்தியாலேயும் ஸ்வதோஷாநுஸந்தாந ஜந்ய பயத்தாலேயும் பஜிக்காதவன் நராதமன். ஸ்வதோஷாநுஸந்தாநம் இருக்கச் செய்தே

யும் அவனுடைய ஸௌலப்ய குணத்தை நன்ருக அறிந்து இடைச்சிகளைப்போலே அவனை பஜிக்கின்றவன் பரமாஸ்திகன் என்பது இந்த ச்லோகார்த்தம்.) ஈச்வர ஸ்வரூப குணங்களில் விபரீதமாக உண்டான ஜ்ஞாநத்தை குத்ருஷ்டிகள் சொல்லும் குயுக்திகளாலே விடுகிறவர்கள் மாயயாபஹ்ருதஜ்ஞாநர்கள். ஈச்வரஸ்வரூப குணாதிவிஷயக பரிபூர்ண ஜ்ஞாநம் ஒருவராலேயும் சலிப்பிக்கவொண்ணாதபடி ப்ரதிஷ்டிதமா யிருந்தாலும் அவனிடத்தில் அஸுரர்களைப்போலே த்வேஷத்தையே, பண்ணுகிறவர்கள் ஆஸுரபாவாச்ரிதர்கள்.] இவர்களில் உத்தரோத்தரன் பாபிஷ்டதமன் என்று ஸ்ரீ கீதா ச்லோகதாத்பர்யம்.

இவ்விடத்தில்,

"உத்தரோத்தரா இதி விசேஷோ(அ)த்ர த்ரஷ்டவ்ய: ந்யாயேந ஜ்ஞாந ப்ரக்ஷேபணவத: ப்ராவிஷ்ட ஸகலஹேது: ஜ்ஞாநாதிசயேऽபி ஸவிசேஷவைஷம்ய ப்ராவீண்ய பாபாதிசய இதி பாவ:।"

என்று ஸ்ரீ தாத்பர்ய சந்த்ரிகையிலே பாவவிவரணம் அருளிச்செய்யப்பட்டது. ஆகையாலே ஆஸுரப்ரக்ருதிக்கு உபதேசித்த ப்ருஹ்மவித்யைக்கு ஆச்ரய தோஷத்தாலே தோஷாவஹத்வம் ஸம்பவிக்கலாம் என்கிற அர்த்தம் த்ருடீக்ருதமாயிற்று. ஒரு வஸ்துவுக்கு ஆச்ரய பேதத்தாலே விருத்த குணவஹத்வம் ஸம்பவிக்கலாமென்கிற விஷயத்தில் "காமம் ஸர்வஸ்ய ச்ரவண ஸுபாஷிதம் ஸஜ்ஜநாஸ்ய ஜிஹ்வா க்ஷிபதி நிரயே நிர்த்தயே ந। விச்வஸ்திம் ஸகலஜநம் நயதி ஹந்த நாகம் ந சைவ ஸஜ்ஜநாநாம் ப்ருத்திம் ஸ்ருஜதி ஸமயே வாதநாமந்த்ரணாய" என்று அடியேனாலே லிகிதமான 'ஸுபாஷிதசதகம்' என்கிற க்ரந்தத்திலே ஜிஹ்வாதபரகஸ்த ச்லோகத்தை உதாஹரணமாகத் தெரிந்து கொள்வது. நாககானது துஷ்டனிடத்திலே சேர்ந்து அவனுமேல ஸாது ஜநங்கள் விஷயத்திலே அதி கருமராக்திகளாக கூறுகிறது அந்தத் துஷ்டனை நரகத்திலே தள்ளிவைக்கும். சிஷ்டனிடத்தில

சேர்ந்து 'ஸ்ரீ க்ருஷ்ண! கோவிந்தா! வாஸுதேவா! நாராயண!' இத்யாதி பாவந தமங்களான பகவந்நாமங்களைச் சொல்லி வைப்பித்து அந்த ஶிஷ்டனை மோக்ஷம் சேரப்பண்ணும். ரஸஜ்ஞர்களுடைய வ்யாபாரமானது பாத்ராநுகுணமாயன்றோ இருக்கும்! என்பது இந்த ஶ்லோகதாத்பர்யம். இங்கு ரஸஜ்ஞாநாம் என்னும் ஶப்தமானது ஶ்லேஷ பலத்தாலே நாக்கையும் ரஸிகர்களையும் சொல்லும். இப்படியாகில் 'ஶாஸ்த்ரம் ஸர்வஶாஸ்த்ராணி வ்ருதா தாநி நிஷ்பலம்' இத்யாதி பூர்வோக்த ப்ரமாணம் வாராதோ வென்னில், அந்த ப்ரமாணங்கள் தைவப்ரக்ருதி விஷயங்களாகையால் விரோதமில்லை. கண்டாகர்ணனுக்கு விஷ்ணுத்வேஷம் நிவ்ருத்தமான பின்பு தத்வஜ்ஞாநம் ப்ரதிஷ்டிதமானபடியால் ஸ்ரீ விஷ்ணுபக்தி மேலிட்டதிறே. இந்த கண்டாகர்ணனுடைய உபாக்யாநம் ஸ்ரீ ஹரிவம்ஶத்தில் 80-வது அத்யாயத்திலே சொல்லியிருக்கிறது. அதாவது:—

'ஸ தத் உத்ஸ்ருஜ்ய பைஶாச்யம் கர்ணௌ ஸம்வேஷ்ட்ய கண்டயோ: ஶ்ரோதவ்யம் விஷ்ணுநாமேதி விஷ்ணோ: நாம விவர்ஜயந்' என்கிறபடியே விஷ்ணு நாமத்தை ஒருக்காலும் கேட்கக்கூடாது என்கிற அபிஸந்தியாலே காதுகளிலே கண்டையைக் கட்டிக்கொண்டபடியால் கண்டாகர்ணனென்று பேரையுடைய பிஶாசஶ்ரேஷ்டனை ஒருவன் ருத்ரபக்தனாய் ஒரு காலத்திலே கைலாஸத்தில் ருத்ரனை 'எனக்கு மோக்ஷம் தாரும்' என்று ப்ரார்த்தித்தான். அநந்தரம் ஸர்வருக்கும் மோக்ஷம் கொடுக்கிற ஶக்தி விஷ்ணு வ்யதிரிக்த தேவதைகளிலே ஒருவருக்கும் இல்லை யாகையால் நீ பதரிகாஶ்ரமத்திலே விஷ்ணுவைப் பஜித்து அவரிடம் மோக்ஷத்தை அடையக்கடவாய்' என்று ருத்ர வாக்யத்தைக் கண்டாகர்ணனவன் கேட்டு, 'ஸர்வோத்தமன் ஸ்ரீ விஷ்ணுவே' என்று தெரிந்துகொண்டு ஸ்ரீ பதரிகாஶ்ரமத்தில் ஒரு கார்ய விஶேஷார்த்தமாக எழுந்தருளின ஸ்ரீ க்ருஷ்ண பகவானைப் பஜித்து ஸத் கதியை யடைந்தான். ஆகையால் ஶிஷ்யனாகவந்த விஷ்ணுத்வேஷிக்கு

ஆசார்யன் விஷ்ணுவினுடைய பரத்வாதிகுணங்களை நன்றாக உபபாதித்து அவனுக்கு விஷ்ணுத்வேஷம் நிவ்ருத்தமாகும்படி பண்ணி, பின்பு ப்ருஹ்ம வித்யையை உபதேசிக்கலாம். விஷ்ணுத்வேஷம் இருக்கும்போது உபதேசிக்கக் கூடாது என்கிற அர்த்தம் நிஷ்பந்நமாயிற்று.

விஷ்ணுவினிடத்தில் த்வேஷமும் பக்தியும் இல்லாமல் உதாஸீநனாய் இருக்கிறவனுக்கு 'ஸுபகோ(அ)பி தேவ விகுணஸ்ய முக்த:' என்று குணமில்லாதவனுக்குத் தோஷாபாவமாத்ரமே குணமென்கிற லோகந்யாயத்தாலே விஷ்ணு பக்திரூப குணமில்லாமற்போனாலும் விஷ்ணு த்வேஷ ரூப தோஷா பாவமாத்ரத்தைப்பார்த்து ப்ருஹ்ம வித்யையை உபதேசிக்கலாகாதோ வென்னில்' 'இதம் தே நாதபஸ்காய நாபக்தாய கதாசந। ந சாஶுஶ்ரூஷவே வாச்யம் ந ச மாம் யோ(அ)ப்யஸூயதி:' என்கிற ஸ்ரீ கீதாசார்ய வசந ப்ரமாணத்தாலே உபதேசிக்கலாகாது. இந்த ஸ்ரீ கீதா ஶாஸ்த்ரத்தைத் தபஸ்பண்ணாதவனுக்கு நீ சொல்லக்கூடாது; தபஸ்பண்ணியிருந்தாலும் ஶாஸ்த்ர ப்ரதனான உன்னிடத்திலேயும் ஶாஸ்த்ர பாதிபாத்யனான என்னிடத்திலேயும் பக்தி இல்லாதவனுக்குச் சொல்லக்கூடாது. அந்த பக்தி இருந்தாலும் ஶ்ரத்தை இல்லாதவனுக்குச் சொல்லக்கூடாது. என்னைத் த்வேஷிக்கிறவனுக்கு ஸுதராம் சொல்லக்கூடாது' என்று ஸ்ரீ கீதாவசந தாத்பர்யம்.

ஆகையாலே விஷ்ணுபக்தி யில்லாதவனுக்கு ப்ருஹ்மவித்யையை உபதேசிக்கிறது ப்ரமாண விருத்த மென்பது ஸித்தம். இப்படி நிஷ்கர்ஷத்தாலே விஷ்ணு பக்தி யிருக்கிறவனுக்கே ப்ருஹ்ம வித்யை உபதேசிக்க வேண்டும் என்கிற அர்த்தம் லபிக்கிறது. இப்படியானால், 'ஸாத்விக பரிஶீலனாதிகளாலே வந்த பகவத் விஷயத்தில் ப்ரீதி விஶேஷம் ஸர்வேஶ்வரனைத் தெளிய வறியவேணுமென்னும் அபிநிவேசத்துக்குக் காரணமாய் 'பக்தி' என்று பேர் பெற்றிருக்கும். இத்தாலே 'ஸ்நேஹபூர்வமநுத்யாநம் ஶாஸ்த்ரா

வேத்ஜிஜ்ஞாஸநம்' என்கிறபடியே ஶாஸ்த்ர ஜந்ய தத்வ ஜ்ஞாந கர்ம யோகாதி பரம்பரையாலே' என்கிற ஸ்ரீமத்ரஹஸ்யத்ரஸாரத்தில் உபாய விபாகாதிகார ஸ்ரீ ஸூக்தி விரோதம்வரும். எங்ஙனேயென்னில்: இந்த ப்ரகரணத்திலே "இங்கவனே' என்று நிர்த்தேஶிக்கலாயிருக்க, 'ஸர்வேஶ்வரனே' என்று நிர்த்தேசித்தது ஸர்வேஶ்வரன் இன்னான் என்று பரத்வாதி யாதாத்ம்ய நிர்ணயத்தில் அபிநிவேஶத்திலே ப்ராதாந்யேந ஹேதுரயம் ப்ரீதி விஶேஷ இதி ஜ்ஞாபநார்த்தம்." என்று ஸ்ரீ ஸாராஸ்வாதிநியில் வ்யாக்யாநம் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. இந்த வ்யாக்யாநத்தாலேயும் 'ஸத்ரா ஶுஶ்ரூஷாவம் மதஶ்ஶ்ரத்தா ஜிஜ்ஞாஸநம் வேத்தி' என்று இங்கு உதாஹ்ருத ப்ரமாண ஸ்வாரஸ்யத்தாலேயும் ஸாத்விக ஸம்பாஷணாதிகளாலுண்டாகும் ஸர்வேஶ்வர விஷயக ஸாமாந்ய பக்தியானது, வேதாந்த ஶாஸ்த்ர ஶ்ரவணத்துக்குப் பூர்வபாவி என்றும், ஸர்வேஶ்வரன் விஷ்ணு வென்கிற பரதத்வ விஶேஷ நிஶ்சயம் ஶாஸ்த்ர ஶ்ரவணத்துக்கு அநந்தரபாவி என்றும் தோன்றுகிறது. இங்கு ஸர்வேஶ்வர விஷயக ஸாமாந்ய பக்தியாவது - ஸர்வேஶ்வரன் இன்னானென்று விஶேஷ நிஶ்சயமில்லாமல் ஸர்வேஶ்வரன் ஒருவன் இருக்கிறான் என்று ஸாமாந்ய நிஶ்சயத்தாலே அவனிடத்தில் உண்டான பக்தி. இப்படி உக்தார்த்தத்துக்கு "யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே யேந ஜாதாநி ஜீவந்தி - யத்ப்ரயந்த்யபி ஸம்விஶந்தீதி தத்விஜிஜ்ஞாஸஸ்வ தத்ப்ரஹ்மேதி - ஏகோ ஹ வை நாராயண ஆஸீந்ந ப்ரஹ்மா நேஶாநோ நேமே த்யாவாப்ருதிவீ" இத்யாதி வேதாந்த வாக்யங்களினாலே ஜகத் காரண பூதனானவன் 'ப்ருஹ்ம ஶப்தவாச்ய னென்றும், நாராயணன் ஜகத் காரண பூதனென்றும் சொல்லுகிறபடியாலே ப்ராமாணிகத்வம் ஸித்தம். ஆகையாலே வேதாந்த ஶாஸ்த்ர ஶ்ரவண பலமான பரதத்வ விஶேஷ நிஶ்சயத்தால் உண்டாகும் விஷ்ணு பக்திக்கு வேதாந்த ஶாஸ்த்ர ஶ்ரவண பூர்வ பாவித்வம் சொன்னால் இந்த உபாய விபாகாதிகார ஸ்ரீஸூக்தி விரோதம் துஷ்பரிஹாரமென்னில்

இந்த விரோதம் வாராது. எங்ஙனேயென்னில்: “ஸர்வேஷாமேவ லோகாநாம் ஸ்ருஷ்டிஸம்ஹாரம் ததா । விஷ்ணோஸ் ஸகாஶாதுத்பூதம் ஜகத்தத்ரைவ ச ஸ்திதம் ॥ க்ருஷ்ண ஏவ ஹி லோகாநாமுத்பத்திரபி சாப்யய: ॥” இத்யாதிதிஹாஸ புராண வாக்யங்களிலேயும் விஷ்ணுவுக்கு ஜகத்காரணத்வம் சொல்லுகிறபடியாலே ஏதாத்ருஶ வாக்யார்த்த ஶ்ரவண ரூபமான ஸாத்விக ஸ்ம்பாஷணத்தாலேயே பரதத்வவிஶேஷ நிஶ்சயம் உண்டாய், அதன் மூலமாக விஷ்ணு பக்தி உதிக்கிலாமிறே. ஆசார்யனிடத்தில் வேதாந்த வாக்யார்த்த ஶ்ரவண பலமான பரதத்வ விஶேஷ நிஶ்சயம் தத்பூர்வ பாவியான ஸாத்விக ஸம்பாஷணத்தாலேயே வருமென்று சொன்னால், ஆசார்யனிடத்தில் வேதாந்த வாக்யார்த்த ஶ்ரவணம் அநாவஶ்யகமாக ப்ரஸங்கியாதோ வென்னில், இது ப்ரஸங்கியாது. ததி மந்தநம்பண்ணி நவநீதத்தை எடுக்கிறாப்போல் ஸமீசீந யுக்திகளாலே விசாரம் பண்ணிவேதார்த்தத்தை நிஷ்கரிஷிக்கிறது கர்ம ப்ரஹ்மோ பய விஷயக மீமாம்ஸா ஶாஸ்த்ரம். உத்ருத நவநீதத்தைக் காட்டுகிறாப்போல் இந்த மீமாம்ஸா ஶாஸ்த்ர நிஷ்க்ருஷ்டமான வேதார்த்தத்தை அநாயாஸேந காட்டுகின்றன இதிஹாஸ புராணாதிகள். ஆகையாலே இதிஹாஸ புராண வாக்யார்த்த ஶ்ரவண ரூபமான ஸாத்விக ஸம்பாஷணத்தாலே உண்டாகிற பாதத்வ விஶேஷ நிஶ்சயமானது ஆபாத ப்ரதீதி ரூபமாயிருக்குமான படியாலே இதற்கு குத்ருஷ்டிகள் சொல்லும் துர்வாதங்களாலே அபஹாரம் ஸம்பாவிதமா யிருக்கும். ஆபாதப்ரதீதி ரூபத்வமாவது - ஸம்ஶயாதி ஸஹமா யிருக்கை. ஆகையாலே குத்ருஷ்டி துர்வாதங்களையும் தன்மூலகங்களான அத்பாத்ம ஜ்ஞாந துர்ப்பலர்களான ஆஸ்திகர்களுடைய புத்தி வ்யாமோஹங்களையும் நிரஸிக்கத்தக்கதான பரதத்வ விஶேஷ நிர்ணயம் தனக்கு ப்ரதிஷ்டிதமா கைக்காக ஆசார்யனிடத்தில் மீமாம்ஸாந்யாயங்களோடே கூடின வேதாந்த வாக்யார்த்த ஶ்ரவணம் அவஶ்யம் கர்த்தவ்யம். உபாய விபாகாதிகார ஸ்ரீ ஸூக்திக்கு ஸாத்விக ஸம்பாஷணத்தாலே உண்டாகிற ஆபாத ப்ரதீதிரூபமான பரதத்வ விஶேஷ நிஶ்சய மூலக

ப்ரீதி விசேஷரூப விஷ்ணுபக்தியானது சாஸ்த்ர ச்ரவணத்துக்கு ஹேது வென்றும் பூர்வோக்த ஸூத்ருட பரதத்வ விசேஷ நிர்ணயமானது சாஸ்த்ர ச்ரவணத்துக்கு பலமென்றும் தாத்பர்யம் கொள்ளலாம். இந்தத் தாத்பர்யமானது ஸாத்விக பரிசீலநாதிகளாலே வந்த பகவத் விஷயத்தில் ப்ரீதி விசேஷம் என்கிற ஸூக்தியாலேயும் ஸர்வேச்வரனைத் தெளிய வறிய வேணுமென்கிற ஸூக்தியாலேயும் வ்யஞ்சித மாகிறது.

தெளிய வறிகையாவது-விசதமாகத் தெரிந்து கொள்ளுகை. வைசத்யமாவது ஸம்சயமில்லாம லிருக்கை. இப்படி ஸ்ரீ ஸாராஸ்வாதிநீ ஸூக்தியிலும் பரதத்வாதி யாதாத்ம்ய நிர்ணயத்தில் என்று நிர்ண்ய சப்தத்தாலே வ்யஞ்சிதம். ஆகையாலே விஷ்ணு பக்தியை யுடையவனுக்கு ப்ருஹ்ம வித்யையை உபதேசிக்கவேணுமென்று சொன்னால், ஒருவிரோதமும் இல்லை. இப்படி மீமாம்ஸாந்யாயங்களோடே கூடின வேதாந்த வாக்யார்த்த ச்ரவணம் அவச்யம் கர்த்தவ்யம் என்கிற அர்த்தத்தை ' [illegible] ' இத்யாதிகளிலே மந்வாதிகளும் சொன்னார்கள்.

இப்படி இந்த ச்லோகமானது “ [illegible] ' என்ற விடத்தில் ருஷிசப்தத்துக்கு வேதபரமாக சிஷ்டர் வ்யாக்யாநம் பண்ணுகையால் தர்மோபதேசமாவது தர்ம சாஸ்த்ரம்” என்று ஸ்ரீ ஸாரதீபிகையில் ஸித்தோபாய சோதநாதி காரத்திலே அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. இப்படி ' [illegible] ' இத்யாதிகளிலேயும் ந்யாய விசாரம்பண்ணி ஸாரத்தை க்ரஹிக்கவேணுமென்கிற அர்த்தத்தைத் தெரிந்து கொள்வது. இந்த ச்லோகத்தில் ' [illegible] ' என்கிறபதம் சாப்தாநேக த்வத்தைச் சொல்லுகிறது. ' [illegible] ' என்கிறபதம் சாஸ்த்ரவைபுல்யத்தைச்

சொல்லுகிறது. 'ஸர்வத:' என்கிற பதத்துக்கு 'ஶாஸ்த்ரேப்ய:' என்கிற பதத்தோடே அந்வயம். வண்டானது ஸகல புஷ்பங்களினின்றும் ஸாரத்தை க்ரஹிக்குமாப்போல் புத்திமானாயிருக்குமவன் அநேகங்களாயும் அதி விபுலங்களாயும் இருக்கிற ஸகல ஶாஸ்த்ரங்களினின்றும் ஸாரார்ததத்தை ந்யாய விசாரம்பண்ணி க்ரஹிக்க வேணுமென்று இந்த ஶ்லோகார்த்தம். 'யதா - ஸர்வத:' என்கிற பதத்துக்கு ஸாரம் என்கிற பதத்தோடே அந்வயம் சொல்லலாம். ஸர்வதஸ்ஸாரம் ஸர்வப்ரகாரத்தாலேயும் ஸாரமென்கிறபடி. ஸர்வப்ரகாரமாவது ஸ்வரூபமும் குணமும். ஆகையால், ஸ்வரூப மாத்ரத்தாலே ஸாரமான அர்த்தத்தையும் குணமாத்ரத்தாலே ஸாரமான அர்த்தத்தையும்விட்டு ஸ்வரூப குணோபயங்களாலேயும் ஸாரமான அர்த்தத்தை விசாரித்து ஶாஸ்த்ரங்களி னின்றும் க்ரஹிக்க வேணுமென்கிற தாத்பர்யம் ஸித்திக்கிறது. இவற்றில் ஸ்வரூப மாத்ரத்தாலே ஸாரமானஶாஸ்த்ரார்த்தம் எது வென்றில், ஐஶ்வர்ய கைவல்ய ஸித்யர்த்தமாகப் பகவானிடத்தில் பண்ணும் பக்திப்ரபத்திகள். இந்த பக்திப்ரபத்திகள் விஷயமான பகவானுடைய உத்கர்ஷத்தாலே ஸ்வரூப தஸ்ஸாரங்களா யிருக்கும் பலமான ஐஶ்வர்ய கைவல்ய ஸுகங்கள் அல்பாஸ்திரங்களான படியாலே குண தஸ்ஸாரங்களல்ல. தத்வஜ்ஞாந ஸித்யர்த்தமாகப் பண்ணும் ருத்ருபக்தியானது குணமாத்ரத்தாலே ஸாரமா யிருக்கும். இந்த பக்திக்குப் பலமான தத்வ ஜ்ஞாநமானது நியமேந ப்ராப்ய ஸ்வரூபாத்யர்த்த பஞ்சக விஷயகமா யிருக்கு மானபடியாலே மோக்ஷோபாய ப்ரவ்ருத்தி த்வாரா மோக்ஷபர்யந்தமாய்ப் பர்யவஸிக்கு மாகையாலே குண தஸ்ஸாரத்வமுண்டு. இந்த பக்திக்கு விஷய பூதனான ருத்ரன் ஸர்வேஶ்வரனைக் காட்டிலும் அதி நிக்ருஷ்ட னானபடியாலே ராஜப்ருத்ய விஷயக பக்திக்குப்போலே ஸ்வரூப தஸ்ஸாரத்வமில்லை. ருத்ரபக்திக்குத் தத்வ ஜ்ஞாநஸாதநத்வ மாவது '[illegible]

மோக்ஷமிச்சேஜ் ஜநார்தநாத்' இத்யாதி ப்ரமாண ப்ரஸித்தம். இப்படி ருத்ரனிடத்தி னின்றும் தத்வ ஜ்ஞாநத்தை அபேக்ஷிக்கிறது ஸர்வாதிகாரிகளுக்கும் சொன்னபடி யன்று. 'நாந்யம் தேவம் நமஸ்குர்யாத் நாந்யம் தேவம் நிரீக்ஷயேத் । நாந்யம் தேவம் நஸேவேத யத்ர விஷ்ணுவாச்ரயோ நர: ॥' இத்யாதிகளிலே ஸ்ரீ வைஷ்ணவனுக்கு தேவதாந்தர நமஸ்காரமானது நிஷித்தமா யிருக்கிறபடியாலே வைஷ்ணவேதரனுக்குச் சொன்னபடி. அந்த வைஷ்ணவேதரனும் ருத்ரபக்தியைப் பண்ணும்போது ருத்ரனிடத்தில் பரதேவதா புத்தியைப் பண்ணக்கூடாது. அப்படிப் பண்ணினனாகில் 'விஷ்ணோரந்யம் பரத்வேந வேத்தி யோ மோஹிதோ நர: । பாஷண்டீ ஸ விஜ்ஞேய: ஸர்வகர்ம பஹிஷ்க்ருத:' இத்யாதி ப்ரமாணங்களிலே விஷ்ணு வ்யதிரிக்த னிடத்திலே விஷ்ணுவைக் காட்டிலும் பரத்வபுத்தியைப் பண்ணுகிறவன் அசேதநப்ராயனென்றும் பாஷண்டியென்றும் ஸர்வ வைதிக கர்மாநதிகாரி யென்றும் சொல்லியிருக்கிறபடியாலே இஷ்டஸித்தி நேரிடாது; ப்ரத்யுத - அநிஷ்டமே ஸித்திக்கும். இப்படி விஷ்ணுவி னிடத்தில் தேவதாந்த்ர ஸாம்ய புத்தியைப் பண்ணுகிறவனும் பாஷண்டி யென்றும் ஸர்வ கர்மாநதிகாரி யென்றும் 'யேது ஸாமாந்யபாவேந மந்யந்தே புருஷோத்தமம் । தே வை பாஷண்டினோ ஜ்ஞேயா: ஸர்வகர்ம பஹிஷ்க்ருதா:' இத்யாதி ப்ரமாணங்களிலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ப்ரமாணத்திலே புருஷோத்தம ஶப்தத்துக்கு ஸ்ரீவிஷ்ணு பரத்வமானது 'யஸ்மாத் க்ஷரமதீதோऽஹம் அக்ஷராதபி சோத்தம: । அதோऽஸ்மி லோகே வேதே ச ப்ரதித: புருஷோத்தம: ॥' என்று ஸ்ரீகீதாசார்யனுடைய ஸ்வவாக்யத்தாலே ஸித்தம். ஆகையாலே தேவதாந்தரத்தி னிடத்திலே பக்தி பண்ணுகிறவன் விஷ்ணுஶரீரமென்கிற புத்தியாலே பண்ணலாம். இந்த அர்த்தத்தை 'யேயஜந்தி பித்ரூந் தேவாந் ப்ராஹ்மணாந் ஸஹுதாஶநாந் । ஸர்வபூதாந்தராத்மாநம் விஷ்ணுமேவ யஜந்தி தே ॥' இத்யாதிப்ரமாணங்களாலே தெரிந்து கொள்வது. தத்வஜ்ஞாநார்த்த மாவது

மோக்ஷார்த்தமாவது பகவானிடத்தில் பண்ணும் பக்திப்ரபத்திகள், ஸ்வரூபத்தாலேயும் குணத்தாலேயும் ஸாரங்களா யிருக்கும். இவற்றிற்கு விஷயோத்கர்ஷத்தாலே ஸ்வரூபதஸ் ஸாரத்வம் ஸித்தம். பலமான மோக்ஷமானது ஸ்வரூபோசிதமாயும் இதர பலங்களைக்காட்டிலும் அநல்பஸ்திரத்வங்களாலே அதிசயிதமாயும் இருக்கிறபடியாலே குணதோபி ஸாரத்வம் ஸித்தம். ஆகையால் ஸர்வ ப்ரகாரத்தாலேயும் ஸாரமான அர்த்தத்தை ஸகல சாஸ்த்ரங்களி னின்றும் ந்யாய விசாரம் பண்ணி க்ரஹிப்பது புத்தி மத்க்ருத்ய மென்று 'ஸாரம் க்ருஹ்ணீயாத்' என்கிற பூர்வோக்த வசந தாத்பர்யம் ஸுஸங்கதமாயிற்று. ஆனால் இந்த வசநத்திலே ந்யாய விசாரம் சொல்லவில்லையே. ஆகையால் அதற்கு ஸித்தி எங்ஙனே யென்னில், இங்கு ந்யாய விசாரம் சப்தமாக ஸித்தியாமற்போனாலும் ஷட்பத த்ருஷ்டாந்தத்தாலேயும், மதிமான் என்கிற சப்த ப்ரயோகத்தாலேயும் ஆர்த்தமாக ஸித்திக்கலாம். எப்படி யென்றால், வண்டானது தன்னுடைய ஆறு பாதங்களினாலேயும் புஷ்பங்களிலே நிஸ்ஸாரங்களைத் தள்ளிவைத்து ஸாரத்தை க்ரஹிக்குமாப்போல், புத்திமானாயிருக்கிறவனும் தன்னுடையபுத்தி சக்திகளினாலே சாஸ்த்ரங்களிலே நிஸ்ஸாரங்களை நிரஸித்து ஸாரத்தை க்ரஹிக்க வேணுமென்று இந்த வசநத்துக்குத் தாத்பர்யம் சொல்லலாமிறே. 'க்ஷுத்ரேப்ய ஷட்பத:' என்று யோகரூடமான ப்ரமரவாசக பதம் இந்த வசநத்திலே உபாத்தமாயிருக்கிறது. ஆகையாலே ந்யாய விசாரத்துக்கு இந்தவசநத்திலே அர்த்ததஸ்ஸித்தி உண்டு. இப்படி பூர்வோக்தாத்மகுண விதாயகமான கௌதம ஸூத்ரத்துக்கு ஸ்ரீ விஷ்ணுபக்தியோடேகூடின ஆத்மகுண விதியிலே தாத்பர்யமானது ப்ரமாணாந்தர பராமர்சத்தாலே சொல்லப்பட்டது. இனி அந்த ஸூத்ரத்துக்கு ஸ்வார்த்த பராமர்சத்தாலேயும் விஷ்ணு பக்தியிலே தாத்பர்யம் சொல்லப்படுகிறது. எங்ஙனே, யென்னில், 'அதாஷ்டாவாத்மகுணா: தயா ஸர்வபூதேஷு க்ஷாந்திரநஸூயா சௌசமநாயாஸோ மங்களமகார்பண்யமஸ்ப்ருஹேதி' - என்பது கௌதம ஸூத்ரம்.

இந்த ஸூத்ரத்திலே ப்ரதமோ பாத்தமான ஆத்மகுணம், ஸர்வ பூததயை. இந்த தயாஸ்வரூபத்தை '[illegible]' என்று ப்ருஹஸ்பதி விவேசநம் பண்ணினர். இதனல், ஸர்வபூதங்களுக்கும் இஷ்டத்தைப் பண்ணுகிறது தயை என்று ஸித்திக்கிறது. இப்படி ஸர்வ பூதங்களுக்கும் இஷ்டத்தைப் பண்ண வேணு மென்கிற விதிக்கு நிமித்தம் எது வென்று விசாரித்தால், ஸர்வ பூதங்களும் ஸர்வேஶ்வரனுக்கு ஶரீரமாயிருக்கிறது நிமித்த மென்று ஸித்திக்கும். எங்ஙனே யென்னில்: ஸ்வாமிக்கு இஷ்டமானதையே பண்ணுகிற தன்ரோ தாஸனுக்கு ஸ்வரூபோசிதம். இந்த இஷ்டாசரணமானது ஸத்வாரக மென்றும் அத்வாரக மென்றும் இருவகைப்படும். இவற்றில் ஸ்வாமி ஸம்பந்தி வஸ்துக்களிலே இஷ்டாசரண மானது ஸத்வாரகம். ஸ்வாமிக்கு ஸாக்ஷாதிஷ்டாசரணமானது அத்வாரகம். ப்ரக்ருதத்திலே ஸர்வேஶ்வரனுடைய ஆஜ்ஞாரூப ஶாஸ்த்ரங்களான நித்ய நைமித்யாதி கர்மங்களுடைய அநுஷ்டாநமானது அத்வாரகேஷ்டாசரணத்திலே சேரும். '[illegible]' இத்யாதி ப்ரமாணங்களிலே ஸர்வ பூதங்களும் ஸர்வேஶ்வரனுக்கு ஶரீரமா யிருக்கிறபடியாலே அந்த பூதங்களுக்கு ஆநுகூல்யத்தைச் செய்ய வேண்டு மென்று சொல்லப்படுகிற ஸர்வ பூதாநுகூல்யா சரணமானது ஸர்வாந்தராத்ம பூதனன ஸ்வாமிக்கு ஸத்வார கேஷ்டா சரணத்திலே சேரும். சரீரத்திலே பண்ணுகிறது ஆத்மாவிலே யன்ரோ பர்யவஸிக்கும். இப்படிப்பட்ட ஸ்வாமீஷ்டாசரணமானது ஸ்வாமியினிடத்திலே ப்ரீதி யில்லாமல் போனல் ஸம்பவிக்க மாட்டாது. ஆகையாலே ஸ்வாமீஷ்டா சரணத்தை விதிக்கிற வாக்யங்களுக்கு ஸ்வாமியினிடத்திலே ப்ரீதி விதியிலேயும் தாத்பர்யம் அவஶ்யம் கொள்ள வேண்டும். ஆகையாலே பூர்வோக்த கௌதம ஸூத்ரத்திலே ஸர்வபூத தயா விதிக்கு ஸர்வ ஸ்வாமியான ஸ்ரீ விஷ்ணுவினிடத்திலே ப்ரீதி

விதியிலேயும் தாத்பர்யம் ஸித்தம். இப்படி குணாந்தரவிதிக்கும் தாத்பர்யமூஹ்யம். ஆகையாலே 'யஸ்யைதே சத்வாரிம்ஶத் ஸம்ஸ்காரா ந சாஷ்டாவாத்மகுணா: ந ஸ ப்ரஹ்மண: ஸாயுஜ்யம் ஸாலோக்யம் ச கச்சதி' என்கிற கௌதம ஸூத்ரத்திலே உக்தமான குணாஷ்டகம் இல்லாமற்போனால் ப்ருஹ்ம ப்ராப்தி இல்லை என்கிற அர்த்தம் ஶாப்தமாக ஸித்திக்கிறாப்போலே பூர்வ ஸூத்ர தாத்பர்ய விஷயமான ஸ்ரீ விஷ்ணுபக்தி யில்லாமற்போனாலும் ப்ருஹ்ம ப்ராப்தி இல்லையென்கிற அர்த்தம் ஆர்த்தமாக ஸித்திக்கின்ற படியாலும் ப்ரமாணாந்தரங்களிலே கண்டோக்தமாயிருக்கிறபடியாலும் ப்ருஹ்ம ப்ராப்தி ஸாதகமான ப்ருஹ்மவித்யையை ஸ்ரீ விஷ்ணு பக்தி யில்லாதவனுக்குச் சொல்லக்கூடாது என்கிற அர்த்தம் இப்படி ஸுப்ரதிஷ்டிதமாயிற்று.

இதி ஸர்வம் ஸுஶோபநம்.

'ப்ரவிஶ்ய ஶ்ருதிரக்ஷிணம் ஸ்வநாபி கமலோத்ஸ்ருஷ்டம் ஸ்வயம் விஷ்வக்பா
ந்யாயதத்த்வ பரிவாதி பாதக்ருபயா யோ விஷ்ணுசித்தாஶ்ரித:।
மஸீகாந்த ஶ்ரீநாதப்ரவிஶ்ய வராதக்ருதே விஸ்வாதுஜம் தஸ்மை
தேஶிக ஸூத்ரவியஸ்ய ஸூரி சக்ஷுஸ்ஸாநந்த ராமஸாவயம்॥'

இதி ஸம்ப்ரதாய நாதோ விஷ்ணுபக்தாம்ஹோஜ ஹஸ்திஶைலநாதாய।
தேநவாப நிஷித்யா தேயேதி ஸதாம் வ்ருஜிஜத் வஜ்ரோ
ஷ்ட்ராம்॥

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

இதி விஜ்ஞாபிகா - கபிஸ்தலம் ரங்கநாததாஸ:

ஸ்ரீ:.

# கடிதங்கள்.

## ஒரு ஸம்சயம்.

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத்விஷயம் ஸ்ரீ. உ. வே. நரஸிம்மாசாரியார் ஸ்வாமியால் தமிழில் மொழிபெயர்த்து அச்சிட்டிருக்கும் பகவத் கீதாபாஷ்ய தாத்பர்ய சந்திரிகையில் இரண்டாவது அத்யாயம் 52-வது சுலோக வியாக்கியானத்தில் (யதா தே மோஹ கலிலம்) 'தத்வஜ்ஞாநாபதீர்ஷ்யாதேர் நிர்வேத: ஸ்வாவமாநநம்' என்று எழுதப்பட்டிருக்கிறது. (முதல் ஷட்கம் ஸம்புடம் 262-ம் பக்கம்). அதன் புட்நோட்டில் "தசரூபகம் 4-பரிச்சேதத்தில் - 'தத்வஜ்ஞாந' உண்மை தெரியாமையினாலும், 'ஆபதீர்ஷ்யாதே:' துக்கத்தில் பொருமையாலும், 'ஸ்வாவ மாநநம்' தன்னை யவமானம் செய்து கொள்ளல் 'நிர்வேத:' நிர்வேதமென்று சொல்லப்படுகிறது" என்று காணப்படுகிறது. தசரூபகத்திலோ 'தத்வஜ்ஞாநாபதீர்ஷ்யாதேர் நிர்வேத: ஸ்வாவமாநநம்' என்று இருப்பதும் தவிர, 'தத்வஜ்ஞாநாந் நிர்வேதோ யதா — ப்ராப்தா: ஸ்ரிய: ... ... தத: கிம், ஆபதோ யதா — — ராஜ்ஞோ விபத்பந்துவ்ய ... ... விரஜீவிதாயா:, ஈர்ஷ்யாதோ யதா — — யிக்ஷ்யிக்ஷ ஶக்ரஜிதம் ... ... ஸ ஏஷ ராவண:" என்று காணப்படுகிறது - 'பரமபத ஸோபாந'த்திலும் நிர்வேத பர்வாவில் 'ஸாத்விக ஸம்பாஷணாதிகளாலே முகிழ்த்த நிர்வேதம் ... ... ப்ருஹஸ்பதியிலு மடியிட நடுங்கும்படியாம். ஈர்ஷ்யாதிகளாலே 'நிர்வேதம்' பிறக்குமாகிலது மேலும் விபரீத வ்ருத்தாந்தங்களிலே கைவளரப்பண்ணும்,' என்றும், விரக்திபர்வாவில் ஆரம்பத்தில் 'இப்படி விவேகமூலமான நிர்வேதபரம்பரையாலே என்றும் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்ததைக் காண்கிறோம்.

இதினுண்மையை சேட்லூர் ஸ்வாமியோ, அல்லது வேறு மஹான்களோ, வேதாந்ததீபிகை மூலமாய் வெளிப்படுத்தி அடியேனுடைய ஸம்ஶயனும் ஸமாதாநமாக்கும்படி பிரார்த்திக்கிறேன்.

புரசைப் பாக்கம், 10-1-17. தேசிகதாஸன்.